தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 03, இதழ்: 133 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 11ஆம் திகதி திங்கட்கிழமை
(26.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 02, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.60

## நத்தார் காணிக்கையில் ரி-56 ரக தோட்டாக்கள்



நத்தார் வழிபாட்டின் போது எட்டு தேவாலயங் களுக்கு பக்தர்கள் வழங்கிய காணிக்கைகளில் 2 துப் பாக்கி தோட்டாக்கள் மீட்கப் பட்டுள்ளன.

மாதம்பை புனித செபஸ் தியர் தேவாலயத்தில் நத்தார் வழிபாட்டின்போது எட்டு தேவாலயங்களுக்கு பக்தர்கள் வழங்கிய காணிக்கைகளை பரிசோதித்ததில் சிறிய கறுப்புப் பெட்டியில் இரண்டு ரி-56 ரக தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர். 02 பக்கம்

## எம்.ஜி.ஆர். நினைவுதினம் யாழில் அனுஷ்டிப்பு



02 பக்கம்

## பணிப்பெண்ணாக செல்வோருக்கு பயிற்சியை கட்டாயமாக்க தீர்மானம்

வீட்டு வேலைகளுக்காக அனுப்பப்படும் பெண் களுக்கு தொழில் பயிற்சியை கட்டாயமாக்க தீர்மானிக் கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கான கற்கை நெறிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரச மற்றும் தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் கூறினார்.

வீட்டு வேலைகளுக்காக அனுப்பப்படும் பெண்க ளுக்காக 2023ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் மூன்றாம் நிலை நிபுணத்துவ சான்றிதழ் கட்டாய மாக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்படும்போது இந்த சான்றிதழைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். 02 பக்கம்

## உஷ்



அரசாங்கத்தின் உயர்மட்ட பிரமுகரான அரசியல்வாதி ஒருவரின் புதல்வரும் அரசியல்வாதிதான். அந்த இளம் அரசியல்வாதியின் மனைவியார் பாதுகாப்பு தரப்பின் சிப்பாய் ஒருவரை காதலித்து அவருடன் வெளிநாட்டுக்கு குடிபெயர்ந்துள்ளாராம்.

இதனால் அதிர்ச்சியடைந்துள்ள அரசியல்வாதி தரப்பு விசேட தேடுதல்களை ஆரம்பித்துள்ளதாம். குறித்த பெண்மணி ஒரு காலத்தில் மாகாண சபையில் இருந்தார் என்பது மேலதிகத் தகவல்.

## கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் 201ஆவது கொடியேற்ற விழா!



09 பக்கம்

# சீரற்ற காலநிலையால் பெரும் பாதிப்பு!

## கண்டியில் இருவர் பலி

## மண்சரிவு தொடரும் அபாயம்

•நா.தினுஷா

தென்மேற்கு வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக நாட்டில் சீரற்ற காலநிலை நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தாழமுக்கம் கிழக்கு கரையினூடாக நுழைந்து நாடுபூராகவும் பயணிக்கும் என்று அந்த திணைக்களம் எதிர்வு கூறியுள்ளதுடன், இன்று (26) நாட்டின் மேற்கு கடற்பரப்பினூடாக தாழமுக்க காற்று பயணிக்குமென எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. 02 பக்கம்



## இன்று இருநிமிட மௌன அஞ்சலி



•கே.சுபானி

ஆழிப்பேரலை அனர்த்த நினைவை முன்னிட்டு இன்று காலை 9.25 மணிமுதல் 9.27 மணிவரை 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்த மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களில் மரணித்த, பாதிக்கப்பட்டோரை நினைவுகூரும் வகையில் தேசிய பாதுகாப்பு தினமான இன்று இந்த மௌன அஞ்சலி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

## மின் கட்டண அதிகரிப்பு குறித்து மனித உரிமைகள் குழு விசாரணை

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கத்தி னால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட விசாரணையை ஆரம்பித்துள்ளது. 02 பக்கம்

## புலம்பெயர், சிவில் சமூகங்களை தீர்வுப் பேச்சில் உள்ளடக்குங்கள்!

### சம்பந்தனிடம் நேரில் கோரிக்கை; அமெ. தமிழ் செயல் குழு விடுத்தது

இலங்கையில் தற்போது வேகமாக மாறிவரும் அரசியல் மற்றும் அரசாங்கத் துடனான பேச்சுவார்த்தையில் சிவில் சமூகம் மற்றும் புலம்பெயர் தமிழர்களை உள்ளடக்குவது அவசியமாகுமென ஐக்கிய அமெரிக்க தமிழ் செயல் குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 02 பக்கம்



சிறையிலிருந்து பொதுமன்னிப்பில் விடுதலையான கைதி ஒருவர் தனக்கு வீடு திரும்ப வழியில்லையென தெரிவித்து, மகஸின் சிறைச்சாலைக்கு முன்பாக வீதியில் சென்றோரிடம் பணம் கேட்டு நின்ற காட்சி இது.
(படப்பிடிப்பு:சமன் அபேசிறிவர்தன)

## தினேஷ் ஷாப்டர் கொலையின் மர்மம் விரைவில் துலங்கும்!

### பொலிஸார் தீவிர விசாரணை

பிரபல வர்த்தகரான தினேஷ் ஷாப்டர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் குடும்ப உறுப்பினர்கள் உட்பட 75 பேரிடம் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02 பக்கம்

## நத்தாரை முன்னிட்டு 309 கைதிகளுக்கு மன்னிப்பு



படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன

02 பக்கம்

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் நாள்

### ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்பு அறிவிக்கப்படும்

எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படும் திகதி குறித்து அறிவிக்கப்படுமென தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

டிசம்பர் மாத இறுதியில் தேர்தல் நடத்தப்படும் திகதி அறிவிக்கப்படுமென தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், சிற்சில காரணங்களினால் தேர்தல் குறித்த அறிவிப்பை சில நாட்களுக்கு ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

போன வருஷம் சுனாமி நினைவு தினத்துக்கு கோட்டா இருந்தவர்... பிறகு அவர் போராட்ட சுனாமியால் அடிபட்டு போனார் எண்டதும் இண்டைக்கு நினைவுக்கு வருகுது..!






மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எந்த இடத்திலிருந்தாலும் அதே இடத்திலிருந்தவாறு
சேமிப்பு கணக்கொன்றை இலகுவாக ஆரம்பித்திடுங்கள்

PEOPLE'S PAY

இப்போது PEOPLE'S PAY APP ஊடாக இருந்த இடத்திலிருந்தே சேமிப்பு கணக்கொன்றை அக்கணமே ஆரம்பியுங்கள்.

1. People's Pay app I Download செய்யுங்கள்
2. உங்கள் விபரங்களை உள்ளிடுங்கள்
3. டிஜிட்டல் சேவைகளுக்கு விண்ணப்பியுங்கள்
4. உங்கள் பொருத்தமான நேரத்திற்கு Non face to face call ஒன்றுக்காக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்

நீங்களும் இன்றே People's pay app பெற்றுக்கொடுக்கும் சிறந்த வசதிகளைப் பெற்றுக்கொண்டு நீங்களும் உங்கள் சுதந்திரத்தை அனுபவித்திடுங்கள்

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation

AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

# இலங்கையில் சாரணர் இயக்கம் ஆரம்பித்து 110 ஆண்டுகள் நிறைவு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலங்கையில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 110 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை முன்னிட்டு அக்கரைப்பற்று - கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் ஏற்பாடுசெய்த விசேட நிகழ்வு அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.சதாத், சங்கத்தின் தவிசாளர் யூ.எல்.எம்.ஹாசிம், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.சீ.எம்.ஹாரீத், உதவி ஆணையாளர்களான எம்.எவ்.றிபாஸ், எம்.ஐ.உதுமாலெவ்வை, ஐ.எல்.ஜெலீல் ஜீ, எம்.எச்.ஹம்மாத் உட்பட மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் சாரணர் இயக்க மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது, சாரணர் இயக்கத்தின் முக்கிய கடமைப்பாடுகள், பாடசாலை மட்ட சாரணர் இயக்கங்களின் பொறுப்புகள் மற்றும் அதன் அவசியம் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுடன், மாணவர்களின் வீதி விழிப்புணர்வு ஊர்வலமும் இடம்பெற்றது.

## எம்.ஜி.ஆர். நினைவுதினம்...

(யாழ்.நிருபர்)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் (MGR) 35ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் (24) அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு அமரர் யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் துணைவியார் இலட்சுமி மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், புளொட் அமைப்பின் முக்கியஸ்தரும் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினருமான ராஜேந்திரம் செல்வராஜா உள்ளிட்டோர் எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

கோப்பாய் சுந்தரலிங்கத்தின் துணைவியார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமரர். யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினர், எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர்கள், பொதுமக்கள், கல்வியங்காடு சமூகத்தினர் என பலர் கலந்துகொண்டனர்.

## மின் கட்டண அதிகரிப்பு...

பிரஜைகளுக்கு வாழ்வதற்கு காணப்படும் உரிமைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளமையை கருத்திற்கொண்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுகின்றமை தொடர்பில் ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தி அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலதிக செயலாளர் மற்றும் இலங்கை மின்சார சபையின் உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளதுடன், தேவைப்படும் பட்சத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரிடமும் விடயங்களைக் கேட்டறிய எதிர்பார்ப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது.

மிக விரைவாக விசாரணைகளை நிறைவு செய்து அறிக்கையை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## நத்தாரை முன்னிட்டு 309...

சிறைச்சாலைகளிலுள்ள 309 கைதிகளுக்கு விசேட பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

நத்தார் விசேட பொதுமன்னிப்பின் அடிப்படையில் இந்த 309 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

விடுதலை செய்யப்பட்ட கைதிகளில் 306 ஆண்களும் 3 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதனிடையே, உறவினர்களை சந்திப்பதற்கு கிறிஸ்தவ மத கைதிகளுக்கு மாத்திரம் நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

நத்தார் தினத்தை முன்னிட்டு இந்தச் சலுகை வழங்கப்பட்டது.

## நத்தார் காணிக்கையில்...

இரண்டு வெடிக்காத தோட்டாக்கள் மற்றும் தங்கத்தை எடைபோடப் பயன்படுத்தப்படும் 6 சிறிய அளவீட்டுக் கருவிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. மாதம்பை புனித செபஸ்தியார் தேவாலயத்திற்கு மேலதிகமாக பொத்துவில், மெதகம, இரத்தினகிரிய, கோப்பியாவத்த, இரட்டைக்குளம், ஹரேந்திரகம, தரான ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள தேவாலயங்களிலும் நத்தார் ஆராதனைகள் இடம்பெற்றன.

இந்தத் தேவாலயங்களுக்கு பக்தர்கள் வழங்கிய புதர்கள் அனைத்தும் மாதம்பை புனித செபஸ்தியார் தேவாலயத்திற்கு கொண்டுவரப்பட்டு, புனித செபஸ்தியார் தேவாலயத்திற்கு வழங்கப்பட்ட காணிக்கைகளுடன் சேகரிக்கப்பட்டு, ஊழியர் ஒருவரால் சரிபார்க்கப்பட்டதாக மாதம்பே பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

சோதனையின்போது, ஒரு வெள்ளை பைக்குள் சிறிய பிளாஸ்ரிக் பெட்டியை கண்டு பிடித்ததாகவும், அதைத் திறந்து பார்த்தபோது, இரண்டு ரி-56 ரக தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பணிப்பெண்ணாக ...

நிபுணத்துவம் மற்றும் திறமையுடைய பெண்களை இந்த வேலைவாய்ப்புக்காக அனுப்புவதே இதன் நோக்கம் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் மேலும் கூறினார்.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்...

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 14 நாட்களின் பின்னர் வேட்புமனு கோரல் ஆரம்பிக்கப்படும் என அவர் கூறினார்.

இதனிடையே எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னதாக தேர்தல் குறித்து அறிவிக்கப்படாத விடத்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக பெவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.






# ஐக்கிய மக்கள் சக்தியில் வெற்றிடமாகும் தேசிய பட்டியல் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கே வழங்கப்பட வேண்டும்

## கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார்

ஐக்கிய மக்கள் சக்தியில் வெற்றிடமாகும் தேசிய பட்டியல் பிரதிநிதித்துவம் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கே வழங்கப்பட வேண்டுமென கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஏகோபித்த அரசியல் கூட்டணியாக தமிழ் முற்போக்கு கூட்டணி மீண்டும் மலையக மக்களால் அங்கீகரிக்கப்பட்டது. அதன்போது, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியோடு சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டிருந்தது. அத்தேர்தலில், "தேசிய பட்டியலிலிருந்து ஒரு பிரதிநிதித்துவம் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வழங்கப்படும்" என்ற உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும், பல்வேறு காரணங்களைக் காட்டி தேசிய பட்டியல் உறுப்புரிமை தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வழங்கப்படவில்லை. எனினும், எதிர்காலத்தில் வெற்றிடம் ஒன்று வருகின்றபோது, அதனை தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வழங்குவதாக கூறப்பட்டிருந்தது. தற்போது, தேசிய பட்டியலில் வெற்றிடம் ஒன்று உருவாகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின், ஐக்கிய மக்கள் சக்தியில் வெற்றிடமாகும் அந்த தேசிய பட்டியல், தமிழ் முற்போக்கு கூட்டணிக்கே வழங்கப்பட வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில், தமிழ் முற்போக்கு கூட்டணி 8 மாவட்டங்களில் போட்டியிட்டிருந்தது. அதன்போது 4 மாவட்டங்களிலிருந்து 6 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அதேவேளை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களிலிருந்து அதிகபட்சமான வாக்குகள் பெறப்பட்டிருந்தன.

வரலாற்றில் முதல் தடவையாக, இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 36,000இற்கும் அதிகமான வாக்குகளை தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர் பெற்றிருந்தார். கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 20,000இற்கும் அதிகமான வாக்குகள் பெறப்பட்டிருந்தது. பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறாத மாவட்டங்களில் நாம் பெற்றுக்கொண்ட வாக்குகளின் மூலம் நேரடியாக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பயனடைந்துள்ளார்கள்.

அந்தவகையில் தேசிய பட்டியலிலிருந்து




எமக்கு ஒன்றல்ல, இரண்டு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், அப்போதைய அரசியல் சூழ்நிலையில் இருந்த பல்வேறு காரணங்கள் அதனைப் பெறுவதில் தடையை ஏற்படுத்தியிருந்தது. எனினும், அந்நிலைமைகள் தற்போது மாற்றமடைந்துள்ளன.

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பங்காளிக் கட்சியாக உள்ளது. அந்தவகையில் வெற்றிடமாகும் தேசிய பட்டியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முழு உரிமையும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு உள்ளது. அதேபோன்று அதனைப் பெற்றுக்கொடுக்கவேண்டிய கடப்பாடு ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளது.

## சீரற்ற காலநிலையால் ...

இந்நிலையில், திருகோணமலை, புத்தளம், பொலன்னறுவை, மாத்தளை, குருநாகல், மட்டக்களப்பு, கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா, பதுளை, அம்பாறை, மொனராகலை, இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு இன்று (26) காலை வரையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நேற்று இடம்பெற்ற கடும் காற்று, இடிமின்னலுடன் கூடிய தொடர்ச்சியான கடும் மழையின் காரணமாக கண்டி, அக்குறணை, துனுவில பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. இதனால், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர். 18 மற்றும் 19 வயதுடைய சகோதரர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

விபத்தின்போது வீட்டில் இறந்தவரின் தாய், தந்தை மற்றும் பிள்ளைகள் என ஐந்து பேர் இருந்துள்ளதுடன், இந்த விபத்தில் இரு பிள்ளைகள் மரணடைந்துள்ளதுடன், ஏனையோர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### வான்கதவுகள் திறப்பு

மேலும், தெதுரு ஓயாவில் ஆறு வான்கதவுகள் நேற்று (25) திறக்கப்பட்டுள்ளன. புத்தளம் மற்றும் ஹலவத்தை பிரதேச மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கோரியுள்ளது. தெதுரு ஓயாவின் மேல் பகுதிகளில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி நேற்று பதிவாகியிருந்ததால் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கலாம் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், யான் ஓயா சிறிதளவு வடிந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் பொறியியலாளர் டி. அபேசிறிவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிலிமத்தலாவ மற்றும் பேராதனை புகையிரத நிலையங்களுக்கு இடையிலும் நானுஓயா புகையிரத கடவைக்கு அருகிலும் மண் மேடுகள் சரிந்து வீழ்ந்துள்ளமையினால், மலையக புகையிரத சேவை நேற்று தடைப்பட்டிருந்தது. இதன் காரணமாக கொழும்பிலிருந்து கண்டி வரையான ரயில் சேவை பிலிமத்தலாவை வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.அத்துடன் கண்டி மற்றும் மகியாவ புகையிரத நிலையங்களுக்கு இடையில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக வீதி தடைப்பட்டிருந்தது. பதுளை - கொழும்பு தபால் சேவை நேற்றிரவு இடம்பெறவில்லை.

அதற்கமைய, இந்த தாழமுக்க காற்று இன்று (26) நாட்டினூடாக பயணிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மேல், சப்ரகமுவ, மத்திய, தென், வடமேல் மற்றும் வடக்கு ஆகிய மாகாணங்களில் இடைக்கிடை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் ஒருசில பிரதேசங்களில் 100 மில்லிமீற்றர் கடும் மழைவீழ்ச்சி பதிவாகுமென்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் ஒருசில பிரதேசங்களில் நாடு முழுவதும் மணிக்கு 40 - 50 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழைவீழ்ச்சியுடன் பதிவாகக்கூடிய தற்காலிக கடும் காற்று மற்றும் மின்னலினால் ஏற்படக் கூடிய அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வலியுறுத்தியுள்ளதுடன் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளனர்.

## தினேஷ் ஷாப்டர் ...

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை - என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கொலை செய்யப்பட்ட தினேஷ் ஷாப்டரின் குடும்ப உறுப்பினர்கள் எல்லாவற்றையும் தெளிவுபடுத்தும் வகையில் ஆதாரங்களை பதிவுசெய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இந்த விசாரணைகளின்படி சாட்சியங்களை பெற்றுக்கொண்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தார்.

**புதிய கோணத்தில் விசாரணை**

தினேஷ் ஷாப்டர் கொல்லப்பட்ட நாளில், முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸுடன் தினேஷ் ஒரு சந்திப்பை நடத்த திட்டமிட்டிருந்ததாக பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தவர், தினேஷ் ஷாப்டரின் செயல் அதிகாரியே தவிர, அவரது செயலாளர் அல்ல என பொலிஸார் தெரிவித்தனர்.

ஷாப்டர் கொல்லப்பட்ட நாளில் பிரையன் தோமஸை சந்திக்க திட்டமிட்டிருந்ததாக தினேஷ் ஷாப்டரின் செயலாளர் பொலிஸாரிடம் தெரிவித்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், தினேஷ் ஷாப்டரின் நிறுவன அதிகாரி ஒருவர் வெளியிட்ட தகவலின்படி, இந்த சந்திப்பு குறித்து பொலிஸாருக்கு அறிவித்தது நிர்வாக தர அதிகாரி ஒருவரே எனவும், சம்பவம் தொடர்பாக ஷாப்டரின் செயலாளரிடமிருந்து பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை எனவும் தெரிவித்தார்.

பொரளை மயானத்தில் தினேஷைக் கண்டுபிடித்து, பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற நிறைவேற்று அதிகாரி, தினேஷ்,தோமஸை சந்திக்கத் திட்டமிட்டிருந்ததாக மரணத்தின் பின்னர் பொரளை பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், பொரளை மயானத்தில் ஷாப்டர் பலியானதையடுத்து, தினேஷ் ஷாப்டரின் கையடக்கத் தொலைபேசியிலிருந்து பிரையன் தோமஸின் கையடக்கத் தொலைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

புலனாய்வாளர்கள் இன்னும் சந்தேகநபர்கள் யாரையும் கைதுசெய்யவில்லை.

எவ்வாறாயினும், இந்த வழக்கில் அவர்கள் 24 மணிநேரமும் பணியாற்றி வருவதாகவும், கொலை மர்மத்தை விரைவில் தீர்க்க முடியும் என்றும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தினேஷை முதலில் காருக்குள் கண்டது முதல் வைத்தியசாலையில் சேர்ப்பதுவரை நடவடிக்கைகளை மேற்கொண்ட தினேஷின் நெருங்கிய நண்பர் மீது பொலிஸாரின் கவனம் திரும்பியுள்ளது. முன்னுக்குப் பின் முரணாக அவர் தெரிவித்துள்ள தகவல்கள் தொடர்பில் பொலிஸாரின் விசேட ஆய்வு இடம்பெறுகிறது.

## புலம்பெயர், சிவில் சமூகங்களை...

இலங்கையில் தற்போது வேகமாக மாறிவரும் அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் புலம்பெயர்ந்த அமெரிக்கத் தமிழ் மக்களாகிய நாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் தமிழர் பிரச்சினை மற்றும் தமிழ்த் தேசிய பிரச்சினை குறித்த எமது நிலைப்பாட்டை அதிகபட்சமாக பரிசீலிக்குமாறு மிக அவசரமாக உங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் - என ஐக்கிய அமெரிக்கத் தமிழ் செயல் குழுவின் (United States Tamil Action Group - USTAG) தலைவர் ஆனந்தன் பொன்னன்பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனிடம் எழுத்துமூலம் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளார்.

ஐக்கிய அமெரிக்கத் தமிழ் செயல் குழுவின் ஸ்தாபக உறுப்பினரும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களில் ஒருவருமான லவன் முத்து அக்கடிதத்தை த. தே. கூ தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளித்தார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த 75 ஆண்டுகளில் எத்தகைய நிபந்தனையும் இல்லாமல் இலங்கை அரசு தமிழர்களுக்கு இழைத்த துரோகத்தை கருத்திற்கொண்டு, அனைத்துலக சமூகத்தின் கண்காணிப்பு மற்றும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் என்பன இலங்கை அரசாங்கத்துடனான எந்தவொரு பேச்சுவார்த்தையின்போதும் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் எங்களுடன் ஏற்றுக்கொள்வீர்கள் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

இலங்கை அரசாங்கத்துடனான எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் தமிழ் சிவில் சமூகம் மற்றும் புலம்பெயர் தமிழர்களை உள்ளடக்குவது அவசியமாகும். தமிழ் புலம்பெயர்ந்தோர் போரின் காரணமாக உருவானார்கள், அவர்களுக்குத் தமது தாய்நாட்டுக்குத் திரும்புவதற்கான உரிமை உள்ளது. எனவே, மோதலின் பின்னரான இறுதித் (அரசியல்) தீர்வில் புலம்பெயர்ந்தோர் சட்டப்பூர்வமான பங்குதாரராக உள்ளனர்.

பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு கட்டத்திலும், P2P ஒருங்கிணைப்பாளர்கள், சமயத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர் சம்மேளனங்களின் பிரதிநிதிகள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் குடும்பங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட தமிழ் சிவில் சமூகத்தை கலந்தாலோசிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், கலந்துரையாடலின் நிலை மற்றும் உள்ளடக்கத்தைப் பொறுத்து சிவில் சமூகம், புலம்பெயர்ந்தோர் மற்றும் துறைசார் நிபுணர்களை உள்ளடக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்த சுற்றுப்பேச்சுகளுக்கு முன்னர், கடந்த 75 ஆண்டுகளில் அதன் உடைந்த வாக்குறுதிகள் மற்றும் துரோகங்களைக் கருத்திற்கொண்டு, தமிழ் மக்களுடன் இலங்கை அரசு தனது நம்பிக்கையை நிறுவ வேண்டும். அரசியல் கைதிகளை விடுவித்தல், இராணுவமயமாக்கல் மூலம் வடக்கு-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டை அகற்றுதல், நில அபகரிப்புகளை உடனடியாக நிறுத்துதல், போரின் முடிவில் சரணடைந்தவர்களின் பட்டியலை வெளியிடுதல் போன்ற நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் இதில் அடங்கும் நல்லெண்ணத்தின் சைகைகளாகும்.

அதேநேரம், இலங்கை அரசாங்கத்துடன் மேலும் சந்திப்பதற்கு முன்னர், பரந்த ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான தீர்வு குறித்து தமிழ்த் தரப்புகளிடையே ஆக்கபூர்வமான கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும். இது ஒரு "கூட்டாட்சி" தீர்வாக இருந்தால், அதன் செயல்பாட்டு விவரங்கள் மற்றும் செயல்பாட்டு பண்புகளை தமிழர்கள் மத்தியில் இருந்து முழுமையாக உருவாக்க வேண்டும், இதனால் அவர்கள் அடுத்த சுற்று பேச்சுவார்த்தைக்கு ஒருமித்த முன்மொழிவை முன்வைக்க முடியும்.

கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களின் மிகவும் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியாகவும், தலைவராகவும் இருந்து, மேற்கூறியவற்றை நீங்கள் உறுதி செய்வீர்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இதையே நீங்களும் மற்றும் பிற தமிழ் நாடாளுமன்ற மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளும் இலங்கை அரச தரப்பைச் சந்திக்கும்போது அதிகபட்சமாக பரிசீலிப்பீர்கள் என நம்புகின்றோம்.

தற்போதைய பொருளாதாரச் சரிவு மற்றும் பிணை எடுப்புக்காக அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் இலங்கையின் மொத்த சார்பு நிலையும் நாம் பிறந்த நாட்டில் இழந்த உரிமைகளை மீளப் பெறுவதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பத்தை முன்வைக்கிறது. எமது மக்களுக்கு அவ்வாறானதொரு முடிவு கிடைக்காமல் இந்த சந்தர்ப்பத்தை நாம் அனுமதிக்க முடியாது.

நீங்கள் சாதிப்பீர்கள் என்று நாங்கள் நம்பும் இந்த முயற்சிக்கு அமெரிக்கா மற்றும் சர்வதேச புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளாகிய எங்கள் மேலான ஆதரவை வழங்க உறுதி பூண்டுள்ளோம் - என அதில் மிகவும் உருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

USTAG அமைப்பானது 2009 இறுதி யுத்த நேரம் இருந்து தமிழர் நலன் கருதி பல முன்நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. மாமனிதர் சிவராமின் ஆலோசனையின் கீழ் உருவான இந்த அமைப்பின் செயலாளராக தமிழ்நாட்டைச் சேர்ந்த சுந்தர் குப்புசாமி செயல்படுகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மூத்த ஆளுமைகள் பங்களிப்பால் பேராதனை பல்கலைக்கழகம் முன்னணியில் திகழ்கிறது

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(இக்பால் அலி)

பேராதனைப் பல்கலைக்கழகம், தெற்காசியாவில் மிகுந்த வனப்புமிக்கதொரு முன்னணிமிக்க பல்கலைக்கழகமாகும். இந்த நாட்டில் முக்கியமான தடயத்தை உயர் கல்வித் துறையில் பதித்துள்ளது. அதற்கு கலாநிதி மகேஸ்வரன் உட்பட பல மூத்த ஆளுமைகள் பங்களிப்புச் செய்துள்ளார்கள் - என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆர்.மகேஸ்வரனின் மணி விழாவும் மலர் வெளியீடும் கண்டி இந்து கலாசார நிலையத்தில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை முன்னாள் தலைவர் தகைசார் பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவருமான ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்

தெற்காசியாவில் ஒழுங்காக வடிவமைக்கப் பட்டது பேராதனைப் பல்கலைக்கழகமாகும். சேர் வில்லியம் ஐவர் ஜெனிங்ஸ், இந்த இடத்தைத் தெரிவுசெய்து இந்த இடத்தில் எப்படிக் கட்டிடங்கள் வடிவமைக்கப்பட வேண்டும் என்பதிலும் வனப்புமிக்கதான உருவாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்த ஒருவர்.

இந்த நாட்டில் பல்கலைக்கழகங்களுக்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அரசியல்வாதிகள் உள்ளே செல்ல முடியாது. அரசியல்வாதியாக பிறந்தமையால் எனக்கும் ஒரு சங்கடம் இருக்கிறது. நிகழ்வுகளுக்கு அழைத்தாலும் செல்ல முடியாது. அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தி வெளியே அனுப்பிவிடுவார்கள். உயர்கல்வி அமைச்சராக இருந்தபோதிலும் எனக்கு போகக் கிடைக்கவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு முன்னால் பெரியளவிலான நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக நான் செல்லவேண்டியிருந்தது. அதற்கு நான் செல்ல விருந்தேன். அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடக்கவிருப்பதாக முதல்நாள் பொலிஸார் கூறினார்கள். நன்மை செய்வதற்கும் அவர்கள் விடும் தன்மை இல்லை எனலாம்.

பேராதனைப் பல்கலைக்கழக பள்ளிவாசலில் குளவிக்கூடுகள் கட்டி பெரிய கோலமடைந்து போய் இருந்தது. அதிகாரமுள்ள நேரத்தில் அமைச்சின் கீழ் உள்ள ஒரு பிரிவின் மூலமாக ஒரு பெரிய தொகையை ஒதுக்கீடுசெய்து பள்ளியை மட்டுமல்ல, பௌத்த விகாரை, இந்து, கிறிஸ்தவ தேவலாய நிர்மாணப்பணிகளை மேற்கொள்ள முயற்சி செய்தபோது அதனை சென்று செய்துகொள்ள முடியாமைப் போயிற்று. நீண்டநாட்களாக நண்பர் மகேஸ்வரன் அடிக்கடி அழைப்பு விடுப்பார். ஆனால், நூலகத்திற்கு செல்ல முடியாத கவலை எனக்குள்ளது.

இடைநடுவில் இந்த நாட்டின் போர்ச் சூழலின் காரணமாக பாரம்பரிய கலைகளுக்கு கொடுத்துவந்த முக்கியத்துவம் சற்று தேக்கமடைந்திருந்த நிலையில் அவற்றையெல்லாம் அபூர்வமாக - அழகாக - புதுமையாக வெளிக்காட்டப்படுவது மிகுந்த பூரிப்பைத் தருகிறது.

மகேஸ்வரனின் சமூகத் தொண்டு மகத்தானது. அவர் கலந்துகொள்ளாத சமூக நிகழ்வுகளே இல்லை என்ற அளவுக்கு மிக ஆர்வத்தோடு எல்லா நிகழ்வுகளிலும் பங்குகொள்வார். கண்டி சில்வெஸ்டர் கல்லூரியில் மாணவராக இருந்து அந்த கல்லூரியின் ஹொக்கி விளையாட்டு வீரராகவும் தேசிய மட்டத்தில் விளையாடும் ஒரு ஹொக்கி வீரராகவும் ஒரு நடுவராகவும் முகவராகவும் உள்ளார் என்பது ஒருபுறம். மற்றைய பக்கங்கள் எல்லாம் ஒன்றுசேர அமைந்துள்ளதுதான் அவருடைய சிறப்பு.

ஒரு தமிழ் இலக்கிய நிகழ்வு என்று வருகிறபோது தவறாமல் காண்கிற முகமாக எங்கும் இருப்பார். நாடு கடந்த இலக்கிய நிகழ்ச்சிகளிலும் இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை இங்கு நடத்தியபோதிலும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து எங்கள் எல்லோரையும் மகிழ்வூட்டுகின்ற ஒரு நல்ல ஆய்வாளராக நாங்கள் கண்டிருக்கின்றோம்

உண்மையில் மகேஸ்வரம் என்ற புத்தகத்தில் அடங்கப்பெற்றிருக்கின்ற ஆய்வுக் கட்டுரைகள் நல்லதொரு பொக்கிஷமாக இருக்கும் எனக் கருதுகின்றேன். அவர் பல்கலைக்கழகத்தின் நூலகர் என்று சொன்னால் தகுதிகளின்படி பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்குச் சமமாக என்று கூறப்படுகிறது. ஆனால், எத்தனையோ நூலகர்கள் சும்மா இருந்துவிட்டுப் போய் விடுகிறார்கள். தாங்களும் தங்களுடைய தொழிலும் என்று நினைவுகூரப்படாமல் நிறையப் பேர் இருக்கலாம்.

மகாவம்சத்தின் ஓலைச் சுவடிகள் சர்வதேச மரபுரிமைக்கு உரித்தானதாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்க துணை நின்றுள்ளார். இந்நாட்டில் சிங்கள சமூகம் அவரை கௌரவிக்க வேண்டும். இன ரீதியிலான பாகுபாடு வேறுபாடு இல்லாமல் எல்லா சமூகங்களையும் கௌரவப்படுத்துகின்ற கண்ணியப்படுத்துகின்ற தன்மை அவரிடம் காணப்படுகின்றது.

இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கண்டி இந்து மாமன்ற அறக்கட்டளை பிரதம ஸ்தாபக அறங்காவலர் துரை. சிவசுப்பிரமணியம் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான், பேராசிரியர் துரைமனோகரன், நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத கோயில் அறங்காவலர் முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன், கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் முன்னாள் அதிபர் மஹிந்த முனசிங்க ஆகியோர் வாழ்த்துரையையும், பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் நூல் அறிமுகவுரையையும், பேராசிரியர் எச்.எம்.டிஆர்.ஹேரத், பேராசிரியர் வை.நந்தகுமார் ஆகியோர் சிறப்புரையையும் ஏற்புரையை மணிவிழாநாயகன் ஆர்.மகேஸ்வரனும் நிகழ்த்தினர்.

# வவுனியாவிலும் 6 கைதிகள் விடுதலை



(வவுனியா நிருபர்)

நத்தார் தினத்தை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 கைதிகள் நேற்று (25) விடுதலை செய்யப்பட்டனர்.

கிறிஸ்தவர்களின் புனித தினங்களில் ஒன்றான நத்தார் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைவாக நாடாளாவிய ரீதியில் 309 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

அதற்கமைவாக சிறு குற்றச் செயல்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தாமை போன்றன காரணமாக வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 கைதிகள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த கைதிகளுக்கு ஆலோசனை வழங்கி, கைலாகு கொடுத்து அவர்களை விடுவித்து வழியனுப்பி வைத்தனர்.

# யாழில் தமிழ்க் கட்சிகள் நீண்ட கலந்துரையாடல்

## உள்ளூராட்சித் தேர்தலில் ஓரணியாக களமிறங்க ஆராய்வு



தமிழ்க் கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்படுவதானால், முதலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஒரு நிலைப்பாட்டிற்கு வரவேண்டுமென தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகள் நேற்று முன்தினம் (24) யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடல் நடத்தின. இதன்போது, தமிழ் அரசுக் கட்சியை ஒரு நிலைப்பாட்டிற்கு வருமாறு ஏனைய கட்சிகள் வலியுறுத்தின.

நல்லூரிலுள்ள சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது. சி.வி.விக்னேஸ்வரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பிற்கு முன்னர் செல்வம் அடைக்கலநாதனும், த.சித்தார்த்தனும் தனித்து மாவை சேனாதிராசாவின் வீட்டிற்குச் சென்று சந்திப்பில் ஈடுபட்டனர். இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டை தெளிவாக தம்மிடம் கூறுமாறு, பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் இருவரும் கேட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானமல்ல எனத் தெரிவித்த மாவை சேனாதிராசா, அடுத்த வாரம் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதை ஆராய்ந்து இறுதி முடிவை தருவதாக கூறினார்.

தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒருமித்த நிலைப்பாட்டிற்கு குந்தகம் வரும் எந்த நிலைப்பாட்டையும், பொறுப்புள்ள கட்சியென்ற அடிப்படையில் எடுக்க மாட்டோம் என மாவை சேனாதிராசா குறிப்பிட்டார்.

இதன்பின்னர் விக்னேஸ்வரனின் வீட்டில் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டைதெளிவுபடுத்துமாறு ஏனைய கட்சிகள் கோரின. கட்சியின் செயற்குழுவைக் கூட்டி, முடிவை அறிவிப்பதாக மாவை தெரிவித்தார்.

அத்துடன், தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட பின், இனப்பிரச்சினை விவகாரத்தில் சேர்ந்து செயற்படுவதில் சிக்கல்கள் வரலாம். தேர்தலில் மோதிக்கொண்ட அடிமட்ட தொண்டர்களை ஏனைய விடயங்களில் ஒன்றிணைப்பதில் சிரமங்கள் வரலாமென்பதால். உள்ளூராட்சித் தேர்தலில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தேர்தலை சந்திக்க யோசனை முன்வைக்கப்பட்டது.

# போதைப்பொருளுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை வந்த 25 பேர் கைது

(மஹுர சுதத் செல்லஹேவா)

பல்வேறு போதைப்பொருட்களுடன் கடந்த இரண்டு தினங்களில் சிவனொளிபாதமலைக்கு வந்த யாத்திரிகர்கள் 25 பேர் ஹட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜிதாத அல்விஸின் பணிப்புரையின்பேரில், ஹட்டன் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களும், ஹட்டன் பிரிவுக்குட்பட்ட ஏனைய பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகளும், பொலிஸ் உத்தியோகபூர்வ நாய் ஸ்டெளட் உதவியுடன் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்புகளில் இந்தக் குழுவைக் கைதுசெய்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன் பிரிவு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர்,

சிவனொளிபாதமலைக்கு வரும் வாகனங்கள் மற்றும் யாத்திரிகர்களை சோதனையிட்டபோது கஞ்சா போன்ற பல்வேறு போதைப் பொருட்களுடன் வந்த 25 இளைஞர்கள் இரண்டு நாட்களில் கைதுசெய்யப்பட்டதாக தெரிவித்தார்.

ஹட்டன் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் கைதுசெய்யப்பட்ட இவர்கள், காலி, ஹலவத்தை, மொனராகலை போன்ற பல்வேறு பிரதேசங்களிலிருந்து வருகை தந்த 20 முதல் 30 வயதுக்கிடைப்பட்டவர்கள் எனவும், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# கோமரசன்குளத்தில் வெட்டுக்காயங்களுடன் உயிருக்குப் போராடிய நிலையில் இருவர் மீட்பு





வவுனியா சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கோமரசங்குளம் பகுதியில் விவசாய பண்ணைக்கு அருகே நேற்று முன்தினம் இரவு (24) வெட்டுக்காயங்களுடன் வீதியில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்

குறித்த பகுதியூடாக நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் சென்றுகொண்டிருந்தபோது வீதியில் வெட்டுக்காயத்துடன் உயிருக்குப் போராடிய நிலையில் காணப்பட்ட ஒருவரை அம்பியூலன்ஸின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்த்திருந்தார். அத்துடன், மேலும் ஒருவரும் குறித்த பகுதியில் வெட்டுக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

போத்தல்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தினாலேயே இருவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் அவர்களின் வயது 50, 53 எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவருவதுடன், இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிதம்பரபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.







உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதி அம்மன் ஆலய வருடாந்த பிரம்மோற்சவ விழாவில் ஞாயிற்றுக்கிழமை (25) கொடியேற்றம் இடம்பெற்றது. இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் வை.சிவநாதன் கொடிச் சீலையை சுமந்தவண்ணம் ஆலயத்தின் உள் வீதியை வலம் வந்து, கொடிச்சீலையை பிரதம குருவிடம் கையளித்தார். பின்னர் மந்திர பாராயணம் படிக்கப்பட்டு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர சிவாச்சாரியாரால் கொடியேற்றம் இடம்பெற்றது. பெருந்திரளான பக்தர்கள் இதில் கலந்துகொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர். (உடப்பு செய்தியாளர்)

# தமிழரசுக் கட்சியின் முல்லை மாவட்ட கிளை தெரிவானது



(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் நிர்வாகத் தெரிவுக்கூட்டம் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றது.

முல்லைத்தீவு - மாங்குளம்,பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குரிய மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த கூட்டமானது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகத்தின் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட கிளைக்கு புதிய தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், உப செயலாளர், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அந்தவகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் புதிய தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய செயலாளராக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும், புதிய பொருளாளராக தம்பிப்பிள்ளை யோகானந்தராசாவும் தெரிவுசெய்யப்பட்டார்.

## பெயர்மாற்றம்

**கற்பிட்டி, நுரைச்சோலை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள புலாச்சேனை கிராமத்தில் வசிக்கும் குரியன் மேரி ஆகிய நான் 30 வருடங்களுக்கு முன் இஸ்லாம் மதத்தினை தழுவி எனது பெயரை சித்தி ஜாரியா (Siththy Jaareeya) என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.**

**சித்தி ஜாரியா**

## வெற்றி நிச்சயம்

**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.**

**உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.**

e b a j b . **ஸ்ரீமத் சுவாமிஜி–0710192687**
h t hh

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, டிசம்பர் 26ஆம் திகதி, திங்கட்கிழமை

# என்ன செய்வார்கள் தலிபான்கள்?

ஆப்கானிஸ்தானில் பெண் கல்விக்குத் தடை மற்றும் பெண்களை பொது வாழ்விலிருந்து வெளியேற்றும் பிற முடிவுகளும் ஷரியா சட்டத்தின்கீழ் வருகின்றன. இதனை மீறினால் பொது மரணதண்டனை மற்றும் கசையடிகள் வழங்கப்படுகின்றன. இதனால், 1996-2001 போல் அல்லாமல் தற்போதைய இந்த ஆட்சி மாறுபட்டதாக இருக்கும் என்ற நம்பிக்கையும் பொய்த்துப் போயுள்ளது.

மேலும், இந்தத் தடையானது, பெண்கள் கல்வி கற்க அனுமதி மறுக்கப்படும் உலகின் ஒரே நாடாக ஆப்கானிஸ்தானை உருவாக்குகிறது.

தலிபான்கள், பெண்கள் உயர் பாடசாலைகளுக்குச் செல்வதற்கான தடையை முதலில் விதித்தனர். அப்போது, இது "தற்காலிகமானதுதான்" என்று அவர்கள் கூறினர். இது செப்டெம்பர் 18, 2021 அன்று, அவர்கள் ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திற்குப் பிறகு, கடைசி அமெரிக்க மற்றும் நேட்டோ துருப்புகள் நாட்டை விட்டு வெளியேறிய இரண்டு வாரங்களுக்குப் பிறகு நடந்தது.

கடந்த ஆண்டு அங்கு இடைநிலைப் பாடசாலைக் கல்விக்கு தடை விதிக்கப்பட்ட பிறகு, குடும்பம் தாங்கக்கூடிய இளம் பெண்கள், கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகளில் 'படிப்புகளில்' சேர்ந்தனர்.

மத்ரஸாக்களில் பெண்களுக்கான 'இஸ்லாமி' வகுப்புகளும் நடத்தப்பட்டன. ஆரம்ப மற்றும் தொடக்கப் பாடசாலைகள் திறந்திருந்தாலும், இடைநிலைக் கல்விக்கான தடை அவர்கள் மீது குளிர்ச்சியான விளைவை ஏற்படுத்தியது. மேலும், தடை முழுவதுமாக இருந்தது. இந்த மாதத் தொடக்கத்தில் தலிபான்கள் மாணவிகளை உயர்நிலைப் பாடசாலைத் தேர்வுகள் எழுத அனுமதித்தபோது (அவர்களின் பாடசாலைகள் ஒரு வருடமாக மூடப்பட்டிருந்தாலும்) நம்பிக்கைகள் தற்காலிகமாக அதிகரித்தன.

இருப்பினும், கடந்த புதன்கிழமை முதல் பெண்களுக்கு கல்வி மறுப்பு முற்றியுள்ளது. பெண் ஆசிரியர்கள் பணிபுரிய தடைவிதிக்கப்பட்டுள்ளது. மருத்துவத்தொழில் மற்றும் காவல்துறையுடன், பணிபுரியும் பெண்களுக்கு எஞ்சியிருக்கும் சில வழிகளில் ஆசிரியர் பணியும் ஒன்றாகும். பெரும்பாலான அரசு அலுவலகங்களில் பெண் ஊழியர்களின் சம்பளத்தை குறைத்து, வாரத்திற்கு ஒருமுறை வருகையைக் குறிக்குமாறு ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

தலிபான்களால், பெண்களை கண்ணுக்குத் தெரியாமல் விடுவது இப்போது வேகமெடுத்து வருகிறது. இந்த ஆண்டு நவம்பர் 9ஆம் தேதி, பெண்கள் பெரும்பாலான பொதுப் பூங்காக்கள், ஹமாம்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டது.

1990களின் பிற்பகுதியில் தலிபான்கள் பொதுத் தண்டனையை மீண்டும் தொடங்கியுள்ளனர். முதல் பொது மரண தண்டனை டிசம்பர் 7ஆம் தேதி தென்மேற்கு மாகாணமான ஃபாராவில் நடந்தது.

கொலையாளி என்று கூறப்படும் ஒருவர் பாதிக்கப்பட்டவரின் தந்தையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் பிறகு பல பொது மக்களுக்கு கசையடிகள் கொடுக்கப்பட்டன.

பெண் கல்வி மீதான தலிபான் தடைக்கு உலகமே பதிலளித்துள்ளது. 1996-2001களில் தலிபான் ஆட்சியை அங்கீகரித்த சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் இம்முறை அவ்வாறு செய்யவில்லை. தடையைக் கண்டித்துள்ளன. துருக்கி, கட்டார், இந்தோனேஷியா ஆகிய நாடுகளும் தடை குறித்து கேள்வி எழுப்பியுள்ளன. பெண்களுக்கு கல்வி மறுப்பது இஸ்லாத்திற்கு எதிரானது என்று சில நாடுகள் கூறியுள்ளன.

G7 வெளியுறவு அமைச்சர்களின் தலைவரான, ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் அன்னலெனா பேர்பாக் தலிபான் முடிவுக்கு எதிராக ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டு எச்சரித்தார். இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், அமெரிக்கா (கட்டார் ஊடாக ) மற்றும் ஆப்கானிஸ்தானின் மத்திய ஆசிய அண்டை நாடுகள் உட்பட சுமார் 15 நாடுகள் காபூலில் வெவ்வேறு அளவிலான இராஜதந்திர மட்டத்தில் தலிபான்களுடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளன. இதில் பெண்கள் மற்றும் பெண்களின் கல்விக்கு சமமான அணுகலை வழங்குதல் மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்கத்தை உருவாக்குதல் ஆகியவை அடங்கும்.


தலிபான்கள் சர்வதேச அங்கீகாரத்திற்காக ஆசைப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற மாட்டார்கள் என்று இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐ.நா. அவசரகால நிவாரண ஒருங்கிணைப்பாளர் மார்ட்டின் க்ரிஃபித்ஸ் தெரிவிக்கையில், "20 மில்லியன் ஆப்கானியர்கள் கடுமையான பசியை எதிர்கொண்டுள்ளனர். மேலும், மில்லியன் கணக்கானவர்கள் நேரடியாகவும் விமர்சன ரீதியாகவும் சர்வதேச உதவியை நம்பியுள்ளனர். ஆப்கானிஸ்தானுக்கு உதவிகளை குறைப்பது உலக நாடுகளின் விருப்பமல்ல" என்றார்.

தலிபான்கள் சர்வதேசத்துடன் சேர்ந்து செல்வதா அல்லது தனியே ஆட்சி நடத்தி விலகி நிற்பதா என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்துவரும் வாரங்கள் பல கேள்விகளுக்கு பதிலைத் தரலாம். என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு தலிபான்களிடமே இருக்கிறது.

# என்றுமே தீரா மனவலி தந்த சுனாமி அனர்த்தம்!





இயற்கையின் கொடுமையால் உலகமே சில வேளைகளில் மிரண்டு போகின்றது. விஞ்ஞானத்தில் விந்தை படைக்கும் நாடுகள் மற்றும் இராணுவ பலத்தில் நாட்டாண்மை செய்யும் வல்லரசு நாடுகள் கூட இந்த இயற்கை அனர்த்தங்களின் முன்னால் எதுவும் செய்ய முடியாமல் மண்டியிட்டு நிற்கின்றன. இயற்கையை வெல்லும் ஆற்றல் மனித குலத்திற்கு இல்லாத போதிலும் அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் திறன் அதற்குண்டு. ஆனால், இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்காததன் விளைவாக கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஆசிய நாடுகளின் கரையோரப் பகுதிகளை புரட்டிப் போட்ட சுனாமி காரணமாக மனிதகுலம் பேரழிவை எதிர்கொண்டது.

இதன் பின்னர் கூட சில அரசாங்கங்களும் மக்களும் விழிப்புணர்வு பெறாதமை துரதிர்ஷ்டவசமானதாகவே உள்ளது. சுனாமி தொடர்பான அறிவைப் பெற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இந்த அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை ஆசிய நாடுகளினால் அரைவாசியேனும் குறைத்திருக்க முடியும். அதன் பிற பாதிப்புகளிலிருந்து மீண்டெழுந்திருக்கவும் முடிந்திருக்கும்.

கடல் பூகம்ப பேரலை ஏற்பட்டு இன்றுடன் (2022.12.26) 18 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதிகாலை வேளையில் அகோரத் தாண்டவமாடிய சுனாமியினால் ஆசிய நாடுகளின் கரையோரப் பகுதிகள் விழுங்கப்பட்டு இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அன்றைய கறுப்பு நாள் ஆசிய நாடுகளெங்கும் கனத்த இதயத்துடனும் ஆறாத துயரத்துடனும் இன்று நினைவு கூரப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கையின் கரையோர மாவட்டங்களையும் 35ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்களையும் சூறையாடிச் சென்ற சுனாமியின் பாதிப்புகளிலிருந்து மக்களால் இன்றுவரை விடுபட முடியவில்லை. அந்தளவுக்கு ஒவ்வொருவரின் மனங்களையும் ரணமாக்கிவிட்டுள்ளது அந்த அனர்த்தம். உயிர் அழிவுகள் மட்டுமன்றி, சொத்து அழிவுகளையும் பாரியளவில் சுனாமி அனர்த்தம் ஏற்படுத்தியதால் இன்றுவரை மீளமுடியாத வாழ்க்கைப் போராட்டத்திற்குள் இலங்கையின் கரையோரப் பகுதி மக்கள் சிக்குண்டு போயுள்ளனர். சொத்துகள் ரீதியாக ஓரளவுக்கேனும் மக்களின் நிலை மேம்பட்டுள்ள போதிலும், உள ரீதியாக அவர்களை மீட்டெடுப்பதென்பது கவலைக்குரிய விடயமாகவே இன்றுவரை உள்ளது. கடல் பூகம்ப பேரலையின் பேரழிவுக்குள்ளான சகல நாடுகளிலும் உயிரிழந்து போனவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்களாக உள்ளனர்.

அத்துடன் உயிர் தப்பியவர்களில் மிகவும் பாதிப்படையக் கூடியவர்களாகவும் உதவியற்றவர்களாகவும் சிறுவர்களே உள்ளனர். ஆயிரக்கணக்கான சிறுவர்கள் அனாதைகளாக்கப் பட்டுள்ளனர். இன்னும் ஆயிரக்கணக்கானோர் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு எதிர்காலத்தை இழந்தவர்களாக உள்ளனர். 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியினால் உயிரிழந்தோர் காயமடைந்தோர் காணாமல் போனோர் ஏராளம். வாழ்விடங்கள் - கட்டடங்கள் அழிவு, சொத்துகள் இழப்பு, நன்னீர்க்கிணறுகள் - தோட்டங்கள் - விவசாயக் காணிகள் என்பன உவர்த்தன்மை கொண்டவையாக மாறியமை, அகதிகள் பெருக்கம், அனாதைகள் உருவாக்கம், உளவியல் பாதிப்பு, பௌதிக வள பாதிப்பு, கடல் வள பாதிப்பு, பொருளாதாரப் பாதிப்பு எனப்பல இழப்புகள் ஏற்பட்டன. உலக நாடுகளின் உதவிகளுடன் அரசும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்ட துரித புனரமைப்பு மற்றும் நிவாரண மீள்குடியேற்ற நடவடிக்கைகளினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை ஓரளவுக்கேனும் இயல்பு நிலைக்குக் கொண்டு வரக்கூடியதாக இருந்தது. இந்நடவடிக்கைகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொண்டர் அமைப்புகளின் பணிகள் பெரும் பங்கு வகித்திருந்தன.

இதேவேளை இலங்கையில் சுனாமி பேரழிவு ஏற்பட்ட பின்னர் அரசினால் முன்னெடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் தற்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது. இதில் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் மக்கள் வாழ்வதற்கு தடை விதிக்கப்பட்டமையை குறிப்பிட முடியும். பல மாதங்கள் இது கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டாலும் தற்போது இது கைவிடப்பட்டுள்ளது. இயற்கை தற்போது ஆசிய நாடுகளை வஞ்சிப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றது.சுனாமி, நில நடுக்கம், புயல், மழை வெள்ளம், நிலச்சரிவு, கடும் வெப்பமென தொடர் தாக்குதல்களை ஆசிய நாடுகளின் மேல் தொடுத்துள்ளது. இதில் எரிமலை நிலநடுக்க அபாயமற்ற நாடாக இலங்கை இருந்து வந்துள்ள போதிலும் தற்போது இலங்கையின் சில பகுதிகளில் நிலநடுக்கங்கள் உணரப்படுவது அபாயத்தின் அறிகுறியாகவே உள்ளது. உலகில் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றங்களுக்கு தற்போது இலங்கையும் முகங்கொடுத்து வருகின்றது.

பருவம் தவறிய மழை வீழ்ச்சி, அதிகூடிய வெப்பநிலை என மாறி மாறி ஏற்பட்டு வருகின்றன. அண்மைக் காலங்களில் அடிக்கடி பெய்யும் அடைமழையினால் நாட்டில் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், இலட்சக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டனர்.கோடிக்கணக்கான ரூபா சொத்துகள் இழக்கப்பட்டன.

உலகை மிரட்டி வரும் இயற்கை அனர்த்தங்களினால் பல்லாயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாகவும் இலட்சக்கணக்கானோர் காயமடைந்துள்ளதாகவும் கோடிக்கணக்கான ரூபா சொத்தழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் ஐ.நா.விடுத்துள்ள இயற்கை அழிவுகள் மற்றும் அனர்த்தங்கள் தொடர்பான அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதில் ஆசிய நாடுகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாறிவரும் காலநிலை மாற்றங்களிலிருந்தும் அச்சுறுத்தி வரும் இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் இயற்கையையும் மக்களையும் பாதுகாக்க அரசும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற போதிலும், அதற்கு பொதுமக்களின் போதிய ஒத்துழைப்புகள் கிடைக்காத நிலையே காணப்படுகின்றது. தமக்கான பாதுகாப்புக்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடத்தில் இல்லாமையே இதற்குக் காரணம். சுனாமி தொடர்பான அறிவையும் அது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் இலங்கை கொண்டிருக்காமையினாலேயே 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களை அதற்கு இரையாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதன் வலியை இன்றுவரையல்ல, என்றுமே இலங்கையால் மறந்து விட முடியாது. இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அரசு எடுத்து வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு நாம் கொடுக்கும் ஒத்துழைப்பின் மூலமே நாட்டையும் நம்மையும் பாதுகாக்க முடியும். தற்போது சுனாமி அனர்த்தம் தொடர்பிலான முன்னெச்சரிக்கை ஒத்திகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அதில் பொதுமக்களின் பங்குபற்றுதலானது சொற்ப அளவிலேயே உள்ளது.

இயற்கை அனர்த்தங்களை எம்மால் தடுக்க முடியாது. ஆனால், குறைக்க முடியும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினால் அவற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்க முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டு அதற்கேற்ற வகையில் அரசும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தொண்டர் அமைப்புகளும் எடுக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்பதன் மூலமே எம்மையும் எமது நாட்டையும் பாதுகாக்க முடியும்.

சுனாமி அனர்த்தத்தின் போது ஒவ்வொரு நாட்டிலும் இறந்தோர் விபரம் வருமாறு:-

இந்தோனேஷியா 1,84,135, இலங்கை 38,195, இந்தியா 22,769, தாய்லாந்து 5,305, கிழக்கு ஆபிரிக்கா 137, மலேசியா 74, மியன்மார் 59, பங்களாதேஷ் 02, மொத்தம் 2,50,676

**க.மகாதேவன்-உடப்பூர்**

## இன்றைய நாளில்...

- 1862– ஐக்கிய அமெரிக்காவின் மினசோட்டாவில் 39 அமெரிக்கப் பழங்குடியினர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1870– ஆல்ப்ஸ் மலைத்தொடருடான 12.8 கி.மீ. நீள தொடருந்து சுரங்கப்பாதை அமைக்கப்பட்டது.
- 1882 – யாழ்ப்பாணம், மன்னார் உட்பட இலங்கையின் பல இடங்களிலும் பலத்த மழையுடன் சூறாவளி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.
- 1896 - சிலாபம் கலவரம்: இலங்கை, சிலாபம் நகரில் சோனகர்களுக்கும் கத்தோலிக்க சிங்களவர்களுக்குமிடையில் கலவரம் வெடித்தது.
- 1898 – மேரி கியூரி, பியேர் கியூரி ஆகியோர் ரேடியத்தை தாம் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.
- 1925 – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1925 – துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.
- 1944 – ஆங் சான் பர்மாவின் நவீன இராணுவத்தை உருவாக்கினார்.
- 1973 – சோவியத்தின் சோயூஸ் 13 விண்கலம் ஒரு வார பயணத்தின் பின்னர் பூமி திரும்பியது.
- 1974– சோவியத்தின் சல்யூட் 4 விண்கலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1975– உலகின் முதலாவது வணிக நோக்கு சுப்பர்சோனிக் வானூர்தி துப்போலெவ் டி.யூ-144 சேவைக்கு விடப்பட்டது.
- 1976 – நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) அமைக்கப்பட்டது.
- 2004 - வடக்கு சுமாத்திராவை நிலநடுக்கம் தாக்கியதைத் தொடர்ந்து தாய்லாந்து, இந்தியா, இலங்கை, மாலைதீவுகள், மலேஷியா, மியன்மார், வங்காளதேசம், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் 300,000 பேர்வரை இறந்தனர்.
- 2006 - சதாம் உசேனின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

ஆளுங்கட்சி ஆக்களின்ர கிறிஸ்மஸ் வாழ்த்துகள காணேல்ல... எந்த முகத்த வச்சுக்கொண்டு வாழ்த்துறது எண்டு யோசிச்சிருப்பாங்களாக்கும்..!



# மார்கழிப் பெருவிழா-2022 யாழில்







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்தத் துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழா-2022 நேற்று (25) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து, தேவாரத் திருமுறையுடன் சைவக் குரவர்கள் நால்வரும் எழுந்தருள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. காலை, மாலை அரங்கங்களாக நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, கலந்துகொண்டவர்களுக்கு அமுதூட்டும் அன்னதானமும் இடம்பெற்றது.

காலை அரங்க நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் தொடக்க உரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராசா வாழ்த்துரையையும் ஆற்றினர். அத்துடன், திருமுறை விண்ணப்பம், சிறப்புரை, கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

மாலை அரங்க நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகியது. இதன்போதும் தொடக்க உரை, வாழ்த்துரை, திருமுறை விண்ணப்பம், சிறப்புரை, திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன.

திருமுறை விண்ணப்பம் மற்றும் சிறப்புரைக்காக இந்தியாவின் தமிழகத்திலிருந்து துறைசார் சான்றோர்களான அண்ணாமலைப் பல்கலைக்கழக தேவார உதவிப் பேராசிரியர் முனைவர். திருஞான. பாலச்சந்திரன் ஓதுவார் மற்றும் தருமை ஆதீனப் புலவர் சிவத்திரு எம்.கே.பிரபாகரமூர்த்தி ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

# போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி

## பேருவளையில் மாணவர்கள் திரள்வு

(பேருவளை பீ.எம்.முக்தார்)

அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையை பூண்டோடு இல்லாதொழிக்கவும் போதைப்பொருள் பாவனையற்ற சிறந்த சமூகத்தை உருவாக்கவும், போதைப்பொருள் பாவனைக்கு தூண்டும் தீய சக்திகளை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் நாடுபூராகவும் விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன..

இந்த வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக பேருவளையில் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான மாபெரும் விழிப்புணர்வு நிகழ்வொன்று இடம்பெற்றது.

பேருவளை அல்-மத்ஸத்துல் முஸ்தபவிய்யா, அல்-மத்ரஸத்துல் நபவிய்யா, அல்-மத்ரஸத்துல் அமீனிய்யா, அல்-மத்ரஸத்துல் ஸஃதிய்யா ஆகிய குர்ஆன் மத்ரஸா கண்களின் கல்வி பயிலும் மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த மாபெரும் விழிப்புணர்வு நிகழ்வில் பெருமளவிலான மாணவர்கள் பங்குபற்றினர்.

போதைப்பொருள் பாவனையை தடுக்கும் வகையிலும் அதனால் ஏற்படக்கூடிய பாரதுரமான ஆபத்துகள், சமூக சீர்கேடுகள் தொடர்பில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்கள் ஏந்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

மத்ரஸாக்களின் அதிபர்கள், போதனாசிரியர்கள், உலமாக்கள், நபவிய்யா அமைப்பின் முக்கியஸ்தர்கள், பெற்றோர்கள் என பலரும் இதில் பங்குபற்றினர்.



*சுன்னாகம் கரிரேஜ் றோட்டறிக் கழகத்தினர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவைகளை உணர்ந்து நீரிழிவு நோயாளர்களுக்கு ஒரு மாத காலத்துக்குத் தேவையான ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியிலான மெட்போமின், இன்சுலின் போன்ற மருந்துகளை கடந்த சனிக்கிழமை வழங்கினர். இந்த மருந்துகளை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை திட்டமிடல் மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவர் ஜதுனி, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர் லயன் சி.ஹரிகரன் ஆகியோரிடம் சுன்னாகம் கரிரேஜ் றோட்டரிக் கழகத் தலைவர் றோட்டேரியன் ந.தேவரூபன், பொருளாளர் றோட்டேரியன் வி.தனநாதன், உப தலைவர் றோட்டேரியன் ஜெ.கிஸ்லி ஆகியோர் வழங்கினர்.*

# பகிர்ந்தளித்து வாழாமையினால்தான் நாட்டுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது

## யாழ். ஆயர் சொன்ன தகவல்



(யாழ்.நிருபர்)

பகிர்ந்தளித்து வாழ்ந்தால் வேறு யாரிடமும் கடன் வாங்கத் தேவையில்லை - என யாழ் மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

யாழ் மரியன்னை ஆலயத்தில் இயேசு பிறப்பு விசேட திருப்பலியை ஒப்புக்கொடுத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது , வசதி படைத்தவர்கள் தம்மிடம் உள்ள பணத்தை வறியவர்களுக்கு பகிர்ந்தால் நாங்கள் வேறு எவரிடமும் கடன் வாங்கத் தேவையில்லை.

வசதி படைத்தவர்கள், செல்வந்தவர்கள் தம்மிடமுள்ள பணத்தினை பகிர்ந்தளித்தால் அனைவரும் சந்தோஷமாக வாழலாம். ஆனால், இந்த நாட்டில் அவ்வாறான நிலை இல்லை. இன்று நாடு இவ்வாறான நிலைக்குச் செல்வதற்குக் காரணம் இவ்வாறான ஒரு நிலைதான்.

ஒரு மனிதன் ஏழைகளுக்கு உணவளித்து தன்னிடம் உள்ளவற்றை இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளித்து வாழ்ந்தாலே அது சிறந்த வாழ்க்கையாகும்.

கிறிஸ்து இயேசு பிறப்பு தினத்திலாவது நாங்கள் பகிர்ந்தளித்து வாழ பழகிக்கொள்ள வேண்டும். ஏழை எளியவர்களுக்கு உணவளித்து வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு வாழ்ந்தால் எமது நாடு முன்னேற்றம் அடையும். எனவே, இந்த இயேசு கிறிஸ்து பிறப்பு தினத்தில் நாங்கள் பகிர்ந்துண்டு வாழ்வதற்கு கட்டாயமாக முயற்சிக்க வேண்டும். நாங்கள் எங்களைப் பற்றி மாத்திரமே சிந்திக்கின்றோம். மற்றவர்களை பற்றி சிந்திப்பதில்லை. எமது வாழ்க்கை முறையைகட்டாயமாக மாற்ற வேண்டும்.

நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமாக இருந்தால் கட்டாயமாக பகிர்ந்தளித்து வாழ வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும். மற்றவர்களுக்கு உடை உரையில் போன்ற ஏனைய விடயங்கள் தொடர்பிலும் உதவ முன் வர வேண்டும்.

# வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு நூல் கட்டிய பெற்றோர்

## நீரிழப்பு ஏற்பட்டு குழந்தை யாழில் உயிரிழப்பு

வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு வயிற்றோட்டத்தை நிறுத்த ஆலயத்தில் நூல் கட்டி காத்திருந்தமையால் குழந்தை உயிரிழந்துள்ளது.


யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த கார்த்தீபன் பூஜா எனும் எட்டு மாதக் குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து பெற்றோர் குழந்தையை அருகிலுள்ள ஆலயம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று பூஜை செய்து, நூல் கட்டியுள்ளனர்.

இருந்தபோதிலும் குழந்தைக்கு வயிற்றோட்டம் நிற்காத காரணத்தால் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை குழந்தையை சிகிச்சைக்காக யாழ், போதனா வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர். அங்கு குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

அதனையடுத்து நேற்று முன்தினம் குழந்தையின் மரண விசாரணையின்போது வயிற்றோட்டம் ஏற்பட்டதன் காரணமாக அதிகளவான நீரிழப்பு ஏற்பட்டே குழந்தை உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.





*வரலாற்றுப் புகழ்மிக்க பேருவளை கெச்சிமலை தர்காவில் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி முஸ்லிம் ஹதீஸ் பராயண தமாம் பெரிய கந்தூரி மஜ்லிஸ் நேற்று (25) சங்கைக்குரிய மௌலவி ஸக்கி அஹம்மத் (அல்-அஷ்ரபி) பின் அஷ்செய்ஹ் காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. வெளிநாட்டு, உள்நாட்டு இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் இதில் பங்குபற்றினர். (பேருவளை பீ.எம்.முக்தார்)*

# குழந்தைப்பேறு இன்மைக்கு இலவச வைத்திய முகாம்







(பேருவளை பீ.எம்.முக்தார்)

திருமணமாகி குழந்தை இல்லாதவர்களுக்கான இலவச வைத்திய முகாமொன்று பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் தேசிய பாடசாலையில் நேற்றும் (25) நேற்று முன்தினமும் (24) பாக்கீர் மாக்கார் மண்டபத்தில் நடைபெற்றது.

சீனன்கோட்டை பாஸிய்யா கல்வி நிலையம் ஏற்பாடு செய்த இந்த இலவச வைத்திய முகாமில் இந்தியாவின் சென்னை மாநகரத்தைச் சேர்ந்த விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவினர் பங்குபற்றி வைத்திய ஆலோசனை வழங்கினார்.

சீனன்கோட்டை வாழிபர் ஹழரா ஜமாஅத் தலைவர் பொறியியலாளர் இமாம் ஹஸன் முர்ஸி தலைமையில் இந்த இலவச வைத்திய சிகிச்சை முகாம் ஆரம்பமானதுடன், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை பொருலாளரும் மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவருமான மௌலவி கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல்-அஸ்ஹரி-எம்.ஏ.) அதன் உறுப்பினர் அஷ்செய்க் இஹ்ஸானுதீன் அபுல் ஹஸன் (நளீமி) சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர்களான எம்.எம்.எம்.சிஹாப் ஹாஜியார்,அரூஸ் அனஸ், பாடசாலையின் அதிபர் பஹீமா பாயிஸ், வாலிபர் ஹழரா ஜமாஅத் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

திருமணமாகியும் நீண்காலமாக குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் பெருமளவிலானோர் இந்த இலவச வைத்திய முகாமில் பங்குபற்றி ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டனர்.

திகதி 23.12.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4978 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,398,710.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 2 3 3 0 0 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.15,639,943.00
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3220 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,817,880.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 07 18 20 71 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.64,911,371.60
ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 1433 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,088,160.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 7 1 4 7 3 7 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,473,689.60
தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 1008 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,840,100.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 15 28 44 78 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 139,049,970.00
ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 287 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.11,060,347.60
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 21 28 44 62 — விசேட இலக்கினம் மேஷம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,500,000.00
கோடி 28+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1326 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,513,620.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.288,320,126.00
M 07 05 40 43 67 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk — பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 24.12.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4979 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,976,960.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 3 4 6 6 0 5 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.16,307,974.00
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3221 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,434,020.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 03 20 46 73 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.65,259,289.20
ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 1434 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,050,720.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 7 5 5 6 9 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,533,162.40
தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 1009 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,487,340.00
வெற்றி இலக்கினம் I வெற்றி இலக்கங்கள் 05 06 16 24 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 139,232,968.00
ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 288 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,498,820.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 05 18 22 40 — விசேட இலக்கினம் ரிஷபம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,548,643.60
கோடி 28+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1327 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,422,940.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.288,576,098.00
X 02 18 34 55 62 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk — பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# யாழ். நகர் வீதிகளில் சைக்கிள் தரிப்பிட கட்டணம் நீக்கம்

(யாழ். நிருபர்)

யாழ். நகர்ப் பகுதிகளில் சைக்கிள்களுக்கு அறவிடப்பட்டுவந்த கட்டணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

யாழ். நகர் மத்தி பகுதிகளிலுள்ள வீதிகளில் வாகனங்களை நிறுத்துபவர்களிடமிருந்து வாகன தரிப்பிட கட்டணங்கள் அறவிட ஒப்பந்தக்காரர்களுக்கான ஒப்பந்தம் யாழ். மாநகர சபையால் வழங்கப்பட்டிருந்தது.

வாகனங்கள், மோட்டார்சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றுக்கு தரிப்பிடக் கட்டணம் அறவிடப்பட்டு வந்தது.

சைக்கிள்களுக்கான தரிப்பிட கட்டணங்களை அறவிட வேண்டாம் என பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக சைக்கிள்களுக்கான கட்டணங்கள் அறவீடு செய்வதைத் தவிர்க்குமாறு முதல்வரால் ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒப்பந்தக்காரர்களின் ஊழியர்கள் தொடர்பில் பலதரப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்த முதல்வர், உரிய முறையில் ஊழியர்கள் நடந்துகொள்வதை ஒப்பந்தக்காரர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும், ஊழியர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் ஒப்பந்தங்கள் இரத்துச்செய்யப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

குறிப்பாக, கட்டணம் அறவிடும் ஊழியர்கள் வெற்றிலை போடுவது, பண்பற்ற வார்த்தைகள் பேசுவது, ஒழுங்கான முறைகளில் ஆடைகள் அணிவதில்லை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த முதல்வர் அதனை உடனடியாக ஒப்பந்தக்காரர்கள் கவனத்திலெடுத்து அவற்றை நிவர்த்தி செய்யுமாறும் ஊழியர்கள் தினமும் மாநகர சபைக்கு வந்து கையொப்பம் இட வேண்டும் எனவும் முதல்வர் பணித்துள்ளார்.

# இலங்கையின் உச்சி என அழைக்கப்படும் 'பனைமுனை கல்வெட்டு' திறப்பு விழா







(யாழ். நிருபர்)

இலங்கையின் உச்சி என அழைக்கப்படும் 'பனைமுனை கல்வெட்டு' பருத்தித்துறை பனைமுனை பகுதியில் நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்துவைக்கப் பட்டது.

இதுவரைகாலமும் இலங்கையின் தலைப்பகுதியாக பருத்தித்துறை – சக்கோட்டை பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இலங்கையின் தேசிய கொடி பொறிக்கப்பட்ட கட்டுமானம் கருதப்பட்டது.

எனினும், அது உண்மையில் தெற்கே தெய்வேந்திரமுனையை நேரே இணைக்கும் முனை அல்ல எனவும், வரலாற்று ரீதியாகவும் பண்டைய வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ளவாறும் உண்மையான இலங்கையின் தலைப்பகுதி (முனை) பருத்தித்துறை பனைமுனை அடையாள கல்வெட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சக்கோட்டை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முனை போர்காலத்தில் வரலாற்று குறிப்புகள், பண்டைய வரைபடங்கள் கணக்கில் எடுக்காமல் பாதுகாப்பு தரப்பால் அமைக்கப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



யாழ். புனித மரியன்னை ஆலயத்தில் பிரதான நத்தார் நள்ளிரவு திருப்பலி யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. (யாழ். நிருபர்)




மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். (மன்னார் நிருபர்)



இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட திருப்பலி பூஜைகள் இடம்பெற்று, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பாலன் பிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. (வவுனியா நிருபர்)

# நுவரெலியாவில் சாரதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை





(திவாகரன்)

நுவரெலியா மாவட்டத்தில் நிலவுகின்ற கடும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது. அத்துடன் மத்திய மலைநாட்டில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற வானிலையால் நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்ந்து கடும்மழை பெய்து வருகிறது.

நுவரெலியா - ஹட்டன், நுவரெலியா - கண்டி, நுவரெலியா -வெலிமடை ஆகிய பிரதான வீதிகளிலும் ரதல்ல, நானுஓயா, டெஸ்போட், கந்தப்பளை உள்ளிட்ட பிரதேசங்களிலும் அதிக பனிமூட்டம் நிலவி வருகின்றது. இதன் காரணமாக சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பாரிய இடையூறுகளை சந்தித்து வருகின்றனர்.

எனவே பிரதான வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் எச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் தங்களுடைய வாகனங்களை செலுத்துமாறும் பனிமூட்டம் நிலவும் வேளையில் தங்களுடைய வாகனத்தின் முகப்பு விளக்குகளை ஒளிரச்செய்து தமக்குரிய பக்கத்தில் வாகனங்களை செலுத்த வேண்டுமெனவும் போக்குவரத்து பொலிஸார் சாரதிகளைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன், நுவரெலியாவிலிருந்து தலவாக்கலையை நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் நானுஓயா சந்திக்கருகில் வீதி தாழிறங்கியுள்ளது. தொடர் மழை காரணமாக இந்த வீதியில் மேலும் பல இடங்களில் சிறிய மண்சரிவுகளும் வெடிப்புகளும் உள்ளமையால் இவ்வீதியை சீரமைக்கும்வரை இவ்வீதியினூடாக பயணங்களை மேற்கொள்ளும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்த வேண்டுமெனவும் கனரக வாகனங்களை அவ்வீதியினூடாக செலுத்த வேண்டாம் எனவும் நானுஓயா பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். அத்துடன் இப்பகுதியானது மேலும் தாழிறங்கும் அபாயம் காணப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கிகளுடன் நால்வர் கைது

(கண்டி நிருபர்)

வத்தேகம பொலிஸ் பிரிவிலுள்ள மடவல, பிட்டியேகெதர என்ற இடத்தில் நேற்று முன்தினம் (24) பொலிஸார் முச்சக்கரவண்டி ஒன்றை சோதனையிட்டபோது காட்டுப்பன்றி இறைச்சியுடன், துப்பாக்கியொன்றும் அதன் ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் 04 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நக்கிள்ஸ் வனப் பாதுகாப்பு மலைச்சாரலில் வேட்டையாடப்பட்ட பாரிய காட்டுப்பன்றி ஒன்றின் 41 கிலோ இறைச்சி மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட 12ஆம் இலக்க வகையைச் சேர்ந்த துப்பாக்கி மற்றும் இரண்டு ரவைகள் என்பவற்றை நுட்பமான முறையில் பதுக்கி வைத்து முச்சக்கரவண்டியில் எடுத்துச் சென்றபோதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்படி துப்பாக்கியை 'ஜாக்கெட்' ஒன்றில் சுற்றி சந்தேகம் ஏற்படாத வகையில் கைகளில் மறைத்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது சந்தேக நபர்கள் மூவரும் சாரதியும் கைதாகியுள்ளனர். இவர்கள் பன்வில மற்றும் கலகெதர பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் நால்வரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கண்டியில் 143 எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்தில் 143 பேர் எச்.ஐ.வி. தொற்று (எய்ட்ஸ்) காரணமாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக கண்டி மாவட்ட எச்.ஐ.வி. தடுப்புப் பிரிவின் பிரதானி, வைத்தியர் எம்.ஐ.எம். லரீப் தெரிவித்தார். கண்டியில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற எச்.ஐ.வி. விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஒன்றின்போதே அவர் இவ்விடயத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி மாவட்டத்தில் ஒப்பீட்டளவில் எச்.ஐ.வி. தொற்று அதிகரித்து வருகின்றது. 1991ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி கண்டி மாவட்டத்தில் 268 பேர் பதிவாகி இருந்தனர். அதில் 143 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். மீதிப்பேர் இடம்பெயர்ந்திருக்கலாம் அல்லது உயிரிழந்திருக்கலாம்.

2021ஆம் ஆண்டு 20 தொற்றுக்குள்ளானோர் புதிதாக இனம் காணப்பட்டனர். அவர்களில் 17 பேர் ஆண்கள் மற்றும் 03 பேர் பெண்கள். 2022ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் மட்டும் 15 பேர் புதிதாக இனம் காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் 24 முதல் 40 வரையான வயதுப் பிரிவினராவர்.

கண்டியில் இதுவரை சிகிச்சை பெற்று வருபவர்களில் 15 வயதுக்கும் குறைவானவர்கள் 13 பேர் உள்ளனர்.

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களில் அதிகமானோர் முறையற்ற பாலியல் தொடர்பு காரணமாக பாதிக்கப்பட்டோர் என்றும் அவர்களில் பெரும்பாலானோர் போதைக்கு அடிமையானோர் என்றும் தெரியவந்துள்ளது. மேற்படி தொற்றுடைய ஆண்களின் மனைவிமாரும் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். தமக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பதாக சந்தேகம் உள்ளவர்கள் கண்டி வைத்தியசாலையிலுள்ள பாலியல் தொற்று நோய் சிகிச்சைப்பிரிவுக்கு சென்று பரிசோதனைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்நோய் ஆரம்பகட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டால் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதில்லை என்று தெரிவித்தார்.





தர்காநகர் கஹ/முஸ்லிம் மகளிர் தேசியப் பாடசாலை அதிபராக கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் அதிபர் ஏ.ஏ.எம்.பாயிஸ் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைக்காக அண்மையில் அங்கு இடம்பெற்ற பிரியாவிடை விழாவின்போது கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் புதிய அதிபர், ஆசிரியர்கள், நிர்வாகம், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திக்குழுவினர், பழைய மாணவிகள் சங்கம் மற்றும் பிரதேசவாழ் மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



மலையகத்தில் கிறிஸ்தவர்கள் நத்தார் பண்டிகையை மிக விமரிசையாக கொண்டாடி வருகின்றனர். இதனை முன்னிட்டு மலையக கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனைகள், கலைவிழாக்கள் என்பன இடம்பெற்றன. ஹட்டன் நகரிலுள்ள திருச்சிலுவை தேவாலயத்தில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்றதுடன், அருட்தந்தை நியூமன் பீரிஸினால் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதன்போது பெருமளவிலான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். (எஸ்.கணேசன்)

# பெருந்தோட்டக் காணிகள் பறிபோகும் அபாய நிலை!

## வேலுகுமார் எம்.பி சுட்டிக்காட்டு

"பெருந்தோட்டக் காணிகள் பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பதற்கு அவசியமான முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்" - என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் பிரதானமானதாக ஜனாதிபதியின் தலைமையிலான உணவு பாதுகாப்பு வேலைத்திட்டம் அமைந்திருக்கின்றது. இத்திட்டத்தின் பின்னணியில் பெருந்தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத காணிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பாக பேசப்படுகின்றது. இந்நிலையில், பெருந்தோட்டக் காணிகள் எமது மக்களிடமிருந்து பறிபோகும் அபாய நிலை தோன்றியுள்ளது. இதனைத் தடுப்பதற்கான பொருத்தமான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உணவு பாதுகாப்புக்காக பிரதேச செயலக மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அப்பிரதேச செயலகப் பிரிவில் பயிரிடப்படாது இருக்கின்ற காணிகளை இனங்காண்பதற்கும் அவற்றை தேவையுடையோருக்கு பகிர்ந்தளிப்பதற்கும், அக்காணிகளில் பயிரிடுவதற்கு அவசியமான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது. இதன்போது, பெருந்தோட்டங்கள் காணப்படும் பகுதிகளில் அங்கு காணப்படும் பயிரிடப்படாத நிலங்களும் பகிரப்படவுள்ளன.



பெருந்தோட்டக் காணிகள் வெளியாருக்கு பகிர்ந்தளிப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் உள்ளன. இந்நிலைமையை தடுக்க முன்கூட்டியே நாம் செயற்பட வேண்டும். பெருந்தோட்டக் காணிகளின் பகிர்வு தொடர்பாக விசேட பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாது பிரதேச அரசியல்வாதிகளிடம் இந்நிகழ்ச்சித்திட்டம் ஒப்படைக்கப்பட்டால் அது பாரிய சிக்கலை ஏற்படுத்துவதாக அமையும்.

மலையகப் பெருந்தோட்டங்களில் பெருமளவு இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். அங்கு காணப்படும் காணிகள் அவர்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாத நிலையில் எமது மக்கள் ஓரங்கட்டப்பட்டு வெளியார்கள் உள்வாங்கப்படுவது சாதாரணமாக இடம்பெற முடியும். இன்றைய அரசாங்கத்திலும் மலையகப் பிரதிநிதிகள் பங்காளிகளாக இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் முன்கூட்டியே திட்டமிட்டு இயங்குவதன் மூலமே எமது இருப்பை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும். அதனை விடுத்து தெரிந்தும் தெரியாததுபோல் இருப்பதற்கு மக்கள் எமக்கு வாக்களித்து பிரதிநிதிகளாக தெரிவுசெய்யவில்லை என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

# மலையக அபிவிருத்திக்குப் பாடுபடும் மருதபாண்டி ராமேஸ்வரன் எம்.பி.



சரித்திரம் போற்றும் சாதூரியமான ஒரு தலைமைத்துவத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் சாணக்கியம், ஆச்சரியமூட்டும் அரசியல் அணுகுமுறை, சரியெனப்பட்டதை தயங்காமல் சொல்லும் தைரியம் இத்தனைக்கும் உரித்தானவர் நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.காவின் தவிசாளரும், நிதிச் செயலாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன். அவரது 46ஆவது பிறந்தநாள் இன்றாகும்.

1976 டிசம்பர் 26ஆம் திகதி வட்டகொடை மடக்கும்பர தோட்டத்தில் பிறந்த மருதபாண்டி ராமேஸ்வரன் ஆரம்பக் கல்வியை மடக்கும்பர தோட்ட தமிழ் வித்தியாலயத்திலும், உயர்கல்வியை தெற்கு மடக்கும்பர தமிழ் மகா வித்தியாலயத்திலும் பயின்றவராவார். கல்வியை முடித்துக்கொண்டு தொழில் நிமித்தம் கொழும்புக்கு வந்த அவர் சிறிதுகாலம் கொழும்பில் தொழில் புரிந்தார். 2000ஆம் ஆண்டில் தன்னை சமூக சேவையில் அர்ப்பணித்துக்கொண்ட இவர், அடிமட்டம் முதல் உயர்மட்டம் வரை



தனது சேவையை விஸ்தரித்துக்கொண்டு பிரதேச சபை உறுப்பினராக, அதன் உப தலைவராக, மாகாண சபை உறுப்பினராக, மாகாண சபை அமைச்சராக, பதில் முதலுமைச்சராக பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராக இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றவராக தன்னை அலங்கரித்துக்கொண்டவராவார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் வழிகாட்டுதல்கள் இவருக்கு மிகவும்



உறுதுணையாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. முப்பது வருடகால அரசியல், சமூக தொழிற்சங்க பயணத்தில் தொய்வே காணாத கம்பீர வழிகாட்டல் தேசிய தலைமைகள் கூட தேடி வந்து சந்திக்குமளவிற்கு அவரது தனித்துவ பாணி தலைதூக்கி நிற்கின்றது. இத்தனைக்கும் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஆளுமையே காரணம்.

அரசியல் தொழிற்சங்க வரலாற்றில் 1994ஆம் ஆண்டு அமரர் செல்லசாமியின் தேர்தல் பணியில் பங்கெடுத்தமை குறிப்பிட்டாக வேண்டும். 2002ஆம் ஆண்டு கொத்மலை பிரதேச சபைக்கான தேர்தலில் 21,370 வாக்குகளைப் பெற்று உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 2006ஆம் ஆண்டு பிரதேச சபைக்கான தேர்தலின் போது 3,760 வாக்குகளைப் பெற்று உப தலைவராக தெரிவானார். பின்னர் 2009ஆம் ஆண்டு முதன்முதலாக மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு 21,544 வாக்குகளைப் பெற்று உறுப்பினரானார். 2013 மத்திய மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலில் 44,495 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். 2015இல் மத்திய மாகாணத்தில் கல்வி அமைச்சராக பொறுப்பேற்றதுடன், 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 57,167 வாக்குகளுடன் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

மலையக அபிவிருத்திப் பணிகளில் மலையக பட்டதாரிகள் நியமனம், உதவி ஆசிரியர்கள் நியமனம், மத்திய மாகாண கால்நடை விவசாய அமைச்சின் ஊடாக மலையக இளைஞர்களுக்கான சுயதொழில் வாய்ப்புகள், அரசாங்க நியமனங்கள், பாடசாலை கட்டடங்கள் அமைப்பது மற்றும் பாடசாலைக்கான உபகரணங்களை வழங்குவதிலும் வெகு முனைப்பாக ஈடுபட்டார். மத்திய மாகாணத்தில் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் விவசாய அமைச்சின் ஊடாக திட்டங்களை அமுல்படுத்துவதிலும் அக்கறை காட்டியிருந்தார். இதன்போது இவரது ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு நாட்டின் தலைவர்களை பல தடவைகள் அழைத்து நிகழ்ச்சிகளை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய மாகாணத்தில் சாகித்திய விழாவை ஹட்டன், நுவரெலியா போன்ற இடங்களில் நடத்தி மலையகத்தில் பெரும்பாலான கலைஞர்களையும், எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் பாராட்டி பரிசில்கள் வழங்கி அவர்களை நன்கு கௌரவித்தமையையும் பெருமையோடு கூறிக்கொள்வதோடு, பல்வேறு சரிதங்களுடன் வெற்றிநடை போட இந்த 46ஆவது பிறந்தநாளில் அவரை நாமும் வாழ்த்துகின்றோம்.

**சவரிமுத்து தேவதாஸ்**
**சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்**
**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்**





**உடப்பு, ஆண்டிமுனை கிராம அலுவலர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கம் இணைந்து ஏழாவது முறையாகவும் நடத்தும் இரத்ததான முகாம் உடப்பு இந்து கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்றது. இதற்கு செடெக் நிறுவனம் தமது பங்களிப்பைச் செய்தது. அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் இதில் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். (உடப்பு செய்தியாளர்)**

# யானை தாக்கியதில் தம்பதியினர் பலி

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

கெப்பித்திகொல்லாவ, சியம்பலாகஸ்வெவ பகுதியில் காட்டுயானையின் தாக்குதலுக்குள்ளாகி கணவனும் மனைவியும் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக கெப்பித்திகொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சியம்பலாகஸ்வெவ பகுதியிலுள்ள வயல் நிலமொன்றிலேயே இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கெப்பித்திகொல்லாவ, சியம்பலாகஸ்வெவ, திததகோனேவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 57, 58 வயதுடைய கணவனும் மனைவியுமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது.

சியம்பலாகஸ்வெவ பகுதியிலுள்ள தமது வயல் நிலத்திலுள்ள கொட்டிலில் காவல் காத்துக்கொண்டிருக்கும்போது இருவரையும் யானை தாக்கியுள்ளதுடன், படுகாயமடைந்த இருவரையும் கெப்பித்திகொல்லாவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்ததன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்ட நிலையில் கணவனும் மனைவியும் உயிரிழந்துள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது .

# எப்பாவல பகுதியிலுள்ள சிறுவனை கடத்தியவர்களுக்கு விளக்கமறியல்

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

அநுராதபுரம் எப்பாவல கிரலோகம பகுதியிலுள்ள 09 வயதுச் சிறுவன் ஒருவரை கடத்திச்சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரையும் ஜனவரி 04 ஆம் திகதிவரைக்கும் விளக்கமறியலில் வைக்கும்படி தமுத்தேகம நீதிமன்ற நீதவான் எம்.எல்.நுவன் கௌஷல்யவினால் உத்தரவிடப்பட்டுள்ளது.



சிறுவனைக் கடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான மின் திருத்துனர் ஒருவரையும் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய குற்றச்சாட்டு தொடர்பில் எப்பாவல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் கடந்த சனிக்கிழமை (24)மாலை தம்புத்தேகம நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே நீதவானால் மேற்படி விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கெக்கிராவ வீதி, தலாவ பகுதியை வசிப்பிடமாக்க கொண்ட எஸ்பெந்துமகே அசேல பிரியந்த பெர்னாண்டோ எனப்படும் மின்சார உபகரணங்கள் திருத்துனர் ஒருவரும் ஹங்குரங்கெத்த, ரிகில்லகஸ்கட பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட நகரசபை சாரதி ஒருவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாரால் மீட்கப்பட்ட சிறுவனை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் மருத்துவ பரிசோதனைக்காக உட்படுத்தப்பட்டபோது சிறுவன் சற்று நோய்வாய்ப்பட்டிருப்பதாக வைத்தியரால் உணரப்பட்டதையடுத்து சிறுவனை சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எப்பாவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எகிறியது ஏலக்காய்

தற்போது சந்தையில் ஒரு கிலோ ஏலக்காய் விலை பன்னிரண்டாயிரம் முதல் பதினான்காயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

நாட்டில் பயிரிடப்படும் ஏலக்காயின் அளவு குறைந்துள்ளதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோ உலர் ஏலக்காயை பதப்படுத்த சுமார் ஆறு கிலோ பச்சை ஏலக்காய் தேவைப்படுவதுடன், சந்தையில் ஒரு கிலோ பச்சை ஏலக்காயின் விலை தற்போது ஏழாயிரம் முதல் எட்டாயிரம் ரூபா வரை உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், நாட்டில் வருடாந்தம் சுமார் முப்பது மெற்றிக் தொன் ஏலக்காய் நுகரப்படுகிறது.

உற்பத்தி குறைந்துள்ளதால், ஏலக்காய் உற்பத்திக்கு அதிக மதிப்பும், தேவையும் ஏற்பட்டுள்ளதாக ஏலக்காய் விவசாயிகள் கூறுகின்றனர்.

# போலியான விசாரணைக்கு வடமாகாண கல்வி அமைச்சும் திணைக்களமும் முயற்சி

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

இலங்கை ஆசிரியர் சங்கம் வழங்கிய முறைப்பாடுகளை போலியான கோணத்தில் விசாரணையை செய்துமுடிக்க வடமாகாண கல்வி அமைச்சும் வடமாகாண கல்வி திணைக்களமும் முயற்சிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் தீலீசன் குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவர் தீபன் திலீசன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மோசடிக்கும்பல்களை வைத்துக்கொண்டு வடமாகாண கல்வியை முன்னேற்றமுடியாது. பெற்றோர் பிள்ளைகளின் கையொப்பத்துடன் இலங்கை ஆசிரியர் சங்கம் வழங்கிய முறைப்பாட்டுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரச பாடசாலைகளில் வசதிகள் சேவைக்கட்டணம் தவிர, வேறெந்த நிதியோ அன்பளிப்பு பாடசாலையால் வசூலிக்க முடியாதென சுற்றுநிரூபம் இருக்கும்போது




அதையும் மீறி நிதி வசூலிக்கப்படும்போது அதை ஆதாரபூர்வமாக நிரூபித்தபோதும் எந்த நடவடிக்கையும் இல்லை.

வடமாகாண கல்வித்துறையிலுள்ள சீர்கேடுகள் தொடர்பில் 2021 டிசம்பர் மாதம் வடமாகாண ஆளுநர் ஊடகங்கள் வாயிலாக கேட்டுக்கொண்டதற்கு இணங்க 100 பக்க முறைப்பாடொன்றை வழங்கியிருந்தோம். அதற்கு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தனர். ஆனால், ஒரு வருடமாகியும் விசாரணை அறிக்கை தாமதமானது.

இந்நிலையில், வடமாகாண கல்வியமைச்சில் காணப்படும் சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகவும் நிர்வாக ஆளுமையற்ற தன்மைகளை சுட்டிக்காட்டி வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நாம் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

அதன் பின்னராக விசாரணைகளை போலியான வகையில் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது - என்றார்.







**நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு கண்டி மனித அபிவிருத்தி தாபனத்தினால் "உணவைப் பாதுகாப்போம்" எனும் செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு மூன்று மாத காலம் சத்துணவு வழங்குதல் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கைக்காக விதைகள், விவசாய உபகரணங்கள், நிதி உதவிகள் வழங்கும் வேலைத் திட்டத்தின் தெல்தோட்டை கிறேட்வெளி தமிழ் தோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான நிகழ்வு தெல்தோட்டை கிறேட்வெளி பாடசாலையில் இடம்பெற்றது.**

**இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்டமிடல் அதிகாரியும் பெண்கள் அமைப்பின் தலைவியுமான லோகேஸ்வரி வழங்கினார்.**

**இதன்போது கிறேட்வெளி தோட்டப்புறப் பாடசாலைக்கு சத்துணவு வகைகளும் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு விதைகளும் வழங்கப்பட்டன. (இக்பால் அலி)**

# தர்கா நகரில் மாபெரும் புத்தகக் கண்காட்சி

**(பேருவளை பீ.எம்.முக்தார்)**

தர்கா நகரில் மாபெரும் புத்தக கண்காட்சி இன்று 26ஆம் திகதி தர்கா நகர் லோட்டஸ் வீதியிலுள்ள மர்ஹபா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிமுதல் பி.ப. 8 மணிவரை இப் புத்தகக் கண்காட்சி இடம்பெறுவதோடு பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அனைத்துவிதமான புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

சிறுவர்களின் ஆற்றல்களை வளர்க்கும் விதத்தில் கலை, கல்வி, சித்திரம் போன்ற போட்டி நிகழ்வுகள் நடைபெறவுள்ளதோடு இதில் வெற்றிபெறுவோருக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

வாசித்த பழைய புத்தகங்களை வேறு புத்தகங்களோடு மாற்றிக்கொள்வதற்கான அரிய வாய்ப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் வழிகாட்டலின் கீழ் புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

# முஸ்லிம்களைப் புறக்கணித்து இனப்பிரச்சினைக்கான தீர்வா?

## முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் விசேட அறிவிப்பு

(மாளிகைக்காடு நிருபர்)



மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரபின் காலத்துக்குப்பிறகு சுமார் 20 வருடங்களுக்குப் பின் கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் அனைத்தும் ஒன்றுகூடி கிழக்கு மாகாணத்துக்கான சம்மேளனம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இந்தக் கூட்டத்தின்போது காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர், கிழக்கு மாகாண சம்மேளனத்தின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

இதன்போது முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் இனப் பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் 3 மாவட்டங்களிலும் உள்ள சிவில் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறில்லாமல் ஒருதலைப்பட்சமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றால் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் குறிப்பிட்ட காலத்துக்குள் முஸ்லிம் மக்களுக்கான தீர்வுத்திட்ட யோசனைகளை அரசாங்கத்திடம் முன்வைக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளன கேட்போர்கூடத்தில் இக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதனை அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் குடும்பஸ்தர் தூக்கிட்டுத் தற்கொலை

(மண்டூர் நிருபர்)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோவில்போரதீவு பொறுகாமம் பிரதேசத்தில் குடும்பத்தினர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோவில்போரதீவு பொறுகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான விநாயகமூர்த்தி சிறிவானுஜன் (வயது 31) என்பவரே தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

குறித்த நபர் மனமுடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் சம்பவ தினத்தன்று அயலிலுள்ள தனது அம்மம்மாவின் வீட்டில் தனிமையில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்ததாகவும் வெளியில் சென்ற அம்மம்மா வீடு சென்று பார்த்தபோது வீட்டின் அறையில் தூக்கிட்ட நிலையில் காணப்பட்டுள்ளார்.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் தூக்கிலிருந்து மீட்டெடுத்து வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைவாக மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொண்டர் நிறுவன அலுவலகத்தை உடைத்துக் கொள்ளையிட்ட நபர் கைது

## வீடியோ கெமரா உட்பட பெருமளவு பொருட்கள் மீட்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில் தொண்டர் நிறுவனமொன்றின் அலுவலகத்தை பட்டப்பகலில் உடைத்துக் கொள்ளையிட்ட சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன், கொள்ளையிடப்பட்ட பெருமளவு பொருட்களையும் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.றஹீம் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் ஆலோசனையின்பேரில் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த சந்தேகநபர் கொள்ளையிடப்பட்ட பொருட்களை ஏறாவூர் பகுதிக்கு விற்பனைக்காக எடுத்துச்சென்றுகொண்டிருந்த சமயம் கல்லடியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீடியோ கெமரா, டெப் கணினி ஸ்பீக்கர்கள் உள்ளிட்ட பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஏறாவூரில் இடி,மின்னல் தாக்கத்தினால் கால்நடைப் பண்ணை கருகி சாம்பல்

(மீராவோடை, ஏறாவூர் நிருபர்கள்)





மட்டக்களப்பு - ஏறாவூர் பிரதேசத்தில் நேற்று (25) அதிகாலை ஏற்பட்ட இடிமின்னல் தாக்குதலில் கால்நடைப் பண்ணையொன்று முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

ஏறாவூர் றகுமானியா மகா வித்தியாலய வீதியிலுள்ள பண்ணையொன்றில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இடி, மின்னல் தாக்கலில் பண்ணையில் அடைக்கப்பட்டிருந்த 9 ஆடுகள், 15 கோழிகள் மற்றும் 3 வாத்துகளும் கருகி சாம்பலாகியுள்ளதுடன், பிராணிகளின் பண்ணை முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சமீப நாட்களாக ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தையடுத்து நேற்று முன்தினம் இரவு தொடக்கம் இடைவிடாத மழை பெய்துவந்தது.

இந்நிலையில், அதிகாலை பாரிய இடிமின்னல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இடிமின்னல் தாக்கத்தினால் பிராணிகளின் பண்ணை கருகியுள்ளதை பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் பார்வையிட வருகை தந்திருந்தனர்.

# திருமலை சிறைச்சாலை கைதிகள் மூவர் விடுதலை

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து மூன்று கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நத்தார் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் சிறு குற்றங்கள் புரிந்த, தண்டப்பணம் செலுத்த முடியாத கைதிகளே இவ்வாறு நேற்று (25) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை சிறைச்சாச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் நடைபெற்ற விடுதலை செய்யும் நிகழ்வில், பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராஜா, பிரதான புனர்வாழ்வு அதிகாரி பி.சுசிதரன், ஜெயிலர்களான சுகத் அமரசிங்க, துலாஜ் மதுசங்க மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# போரதீவுப்பற்றில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(பாண்டிருப்பு நிருபர்)

போரதீவுப்பற்று பிரதேசத்தில் பரவிவரும் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை இல்லாதொழிக்கும் வகையில் இங்குள்ள கிராமங்கள்தோறும் டெங்கு ஒழிப்பு சிரமதான நடவடிக்கைகள் பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி வழிகாட்டலில் நடைபெற்றுவருகின்றன.

இதற்கமைய வெல்லாவெளி பிரதான வீதியில் தொடங்கி பட்டிருப்பு பாலம் வரைக்குமான பாரிய டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணி முன்னெடுக்கப் பட்டது. இதன்போது பாதையின் இருமருங்கிலும் காணப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன் பைகள், குப்பைகூளங்கள் மற்றும் டெங்கு பரவக்கூடிய - நீர்தேங்கி நிற்கக்கூடிய இடங்கள் இனங்காணப்பட்டு சுத்தம்செய்யப்பட்டது.



இச்சிரமதான நடவடிக்கையில் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சகல கிராமங்களில் இருந்தும் சமுர்த்திப் பயனாளிகள் கலந்துகொண்டிருந்தனர்.

# படைப்புழுவின் தாக்கம் காரணமாக கிண்ணியாவில் சோளச்செய்கைப் பாதிப்பு





(கிண்ணியா நிருபர்)

படைப்புழுவின் தாக்கம் காரணமாக சோளச் செய்கையாளர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பிரதேசத்தில் கற்குழி, வட்டமடு, பனிச்சங்குளம், குரங்குபாஞ்சான் உட்பட பல பகுதிகளிலும் தற்போது சோளக் கதிர் அறுவடை இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில், ஒருவகை படைப்புழு தாக்கம் அதிகரிப்பால் விளைச்சல் குறைவு எனவும் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

பல இலட்சம் ரூபா செலவு செய்து சோளச்செய்கை மேற்கொண்டிருந்தபோதும் உரிய விளைச்சல் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் பசளை தட்டுப்பாடு, படைப்புழுவின் தாக்கம் போன்றன ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.



**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வைத்திய அத்தியட்சகர் ரொஷான் போலிடம் கையளிக்கப்பட்டது. (சியாத்.எம்.இஸ்மாயில்)**

# அம்பாறை மாவட்ட செயலகத்தில் சுவதம் இலக்கிய விருது வழங்கல் விழா





(திராய்க்கேணி, பெரியநீலாவணை நிருபர்கள்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட இலக்கிய விருது வழங்கல் விழா மற்றும் பிரதேச கலைஞர் 'சுவதம்' விருது வழங்கல் நிகழ்வானது நேற்று முன்தினம் (24) அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது சாபிர் தலைமையில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் அதிதியாக கலந்து சிறப்பித்ததோடு, அனைத்து தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் த.மு.ரின்சான், பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு, கலைஞர்கள், மாணவர்களுக்கான விருதுகள், பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அம்பாறையில் இடி, மின்னல் மழையால் 4 வீடுகள் சேதம்

## அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் முகமட் றியாஸ்

(கனகராசா சரவணன்)

அம்பாறை மாவட்டத்தில் இடி, மின்னல், காற்றுடன் பெய்துவரும் அடைமழையால் நேற்று (25) அதிகாலை 3 மணியளவில் 4 வீடுகளின் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளதாக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் எம்.ஏ.முகமட் றியாஸ் தெரிவித்தார்

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு தொடக்கம் பாரிய இடி, மின்னல், காற்றுடன் கடும் மழை பெய்து வருகின்றது. இந்நிலையில், ஏற்பட்ட கடும் காற்றினால் பதியத்தலாவை பிரதேசத்திலுள்ள இரு வீடுகளும் உகண பிரதேசத்திலுள்ள இரு வீடுகள் உட்பட 4 வீடுகளின் கூரை தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளதுடன், வீட்டில் இருந்த எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

இதில் பாதிக்கப்பட்டவர்கள் அருகிலுள்ள உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். தொடர்ந்து மழை பெய்து வருவதால் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதுடன், குளங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. எனவே, பொதுமக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அவர் தெரிவித்தார்.

# கிண்ணையடி மகா விஷ்ணு வழி வீதி காவடி பாடல் இறுவெட்டு வெளியீடு

(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை கிண்ணையடி ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்திற்காக பாடப்பட்ட கிண்ணையடி மகா விஷ்ணுவழி வீதி காவடி பாடல் இறுவெட்டு வெளியீடு நேற்று (25) இடம்பெற்றது.

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களில் ஒருங்கே அமையப்பெற்ற வாழைச்சேனை கிண்ணையடி, ஸ்ரீ மகா விஷ்ணு மீது கொண்ட பற்றும், கிண்ணையடியை பிறப்பிடமாகக்கொண்ட கவிஞர் மயில்வாகனம் ஸ்ரீபிரகாஸால்






உருவாக்கப்பட்ட பாடல் வரிகளுக்கு, இசை ஒளியாக்கம் DTS படைப்பாகம் மண்டூர், இசையமைத்துப் பாடப்பட்ட மகா விஷ்ணு வழி வீதி காவடி பாடல் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்விற்கு அதிதிகளாக கிண்ணையடி அயல் கிராம ஆலயங்களின் தலைவர்கள் கலந்துகொண்டு இறுவெட்டினை வெளியிட்டு வைத்தனர்.

கிண்ணையடி ஸ்ரீ மகா விஷ்ணு ஆலய செயலாளர் மு.கோகிலதாசன் தலைமையில் இடம்பெற்ற இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன், ஆரம்பமாகியதைத் தொடர்ந்து, ஸ்ரீ விஷ்ணு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.ஜெயசீலன் குருக்களின் இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

# 18 ஆண்டுகள் கடந்தும் மக்களுக்கு கிடைக்காத மருதமுனை சுனாமி வீடுகள்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இன்றுடன் 18 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில், மருதமுனை 65 மீற்றர் வீட்டுத்திட்டத்தில் 78 வீடுகள் இதுவரை மக்களுக்கு வழங்கப்படாமல் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களுக்காக கட்டப்பட்ட வீட்டுத்திட்டமே மருதமுனை 65 மீற்றர் வீட்டுத் திட்டமாகும்.

கடற்கரையிலிருந்து 65 மீற்றர் எல்லைக்குள் குடியிருந்து இருப்பிடங்களை இழந்த பாதிக்கப்பட்ட மக்களுக்காக கிராமத்தின் மேற்குப் புறமாக கிடந்த மேட்டுவட்டை காணியில் தேசிய வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சால் 186 வீடுகளை நிர்மாணிப்பதற்கு அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன் நிர்மாண வேலைகள் 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி மக்கள் பாவனைக்கு வீடுகள் வழங்கப்படும் என அப்போது அம்பாறை மாவட்ட செயலகத்தினால் அறிவிக்கப்பட்டது.

எனினும், பல்வேறு மக்கள் போராட்டங்கள், தடைகள் என நீதிமன்ற கதவுகளையும் முட்டிமோதி முதற்கட்டமாக 2012ஆம் ஆண்டு 50 வீடுகள் கையளிக்கப்பட்டன. 178 வீடுகளில் இதுவரை நூறு வீடுகள் மாத்திரமே மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. மீதமாக உள்ள 78 வீடுகளும் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 18 ஆண்டுகள் தாண்டியும் இதுவரை மக்களுக்கு வழங்கப்படாத நிலையில் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றன. காலத்துக்கு காலம் வரும் அரசியல் தலைவர்களால் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும் மக்களுக்கு வீடுகள் கிடைக்கவில்லை. இந்நிலையில், குறித்த 78 வீடுகளும் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன.

வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள், ஜன்னல்கள் திருடப்பட்டும் உடைக்கப்பட்டும் களவாடப்பட்டுள்ளன. தற்போது வீட்டுக் கூரைகளும் களவாடப்பட்டு வருகின்றன. மனிதர்கள் மாத்திரமல்லாது விலங்குகளும் அசிங்கங்கள் செய்யும் மறைவிடமாக இப்பகுதி மாறி வருவதாக மக்கள் வேதனையோடு தெரிவிக்கின்றனர்.

கிராமத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக மாறிவரும் இந்த வீடுகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும் என்று கடந்த 18 ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் இந்த வீட்டுத்திட்டத்தை அண்மித்த பகுதிகளில் குடியேறிய மக்கள் தமது அவலக் குரல்களை எழுப்பி வருகின்றனர்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நினைவுநாளான இன்றைய தினமும் (26) இம்மக்கள் குறித்த இந்த 78 வீடுகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வராதிருப்பது ஏன்? என கேள்வி எழுப்பி தமது அவலங்களை வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

# கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் 201ஆவது கொடியேற்ற விழா





(எம்.என்.எம்.அப்ராஸ், சர்ஜுன் லாபீர், நூறுல் ஹுதா உமர் )

நானிலம் போற்றும் நாகூர் நாயகம், கருணைக் கடல், குத்புல் மஜீத் ஹழ்றத் செய்யிதுனா மஹான் சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் நினைவாக அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மக்களால் நடாத்திவரும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹாவில் 201ஆவது கொடியேற்ற விழா, நேற்று முன்தினம் (24) ஆரம்பமானது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாயலில் இருந்து புனித கொடியானது உலமாக்கள், பக்கீர் ஜமாஅத்தினர், நிர்வாகிகள், ஊர்மக்கள் புடைசூழ தீன் கலிமா முழக்கத்துடன் ஊர்வலமாகச் சென்று கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா மினாராக்களில் ஏற்றிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப், கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாஹிபு, கல்முனை மாநகர சபை உறுப்பினர் வஸீரா ரியாஸ், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கல்முனை மாநகர சபை பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம் அஸீம், கல்முனை செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.ரம்சான், கல்முனை தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர், கடற்படை பொறுப்பதிகாரி ரொசன் விஜயதாச, கல்முனை பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.எம்.வாஹீட், நாகூர் ஆண்டகை தர்ஹா சரிப் நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கொடியேற்ற தினத்திலிருந்து தொடர்ந்து 12 நாட்களுக்கும் பாதுஷா சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் (கத்தஸல்லாஹு சிர்ரஹுல் அஸீஸ்) அன்னவர்களின் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் புனித றிபாஈ றாதிப், உலமாப் பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளதோடு கொடியிறக்கும் தினமான எதிர்வரும் ஜனவரி 04ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன், அன்றைய தினம் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

# ஏறாவூர் தாமரைக்கேணியில் மூழ்கி 7 வயது சிறுமி மரணம்



(மீராவோடை நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாமரைக்கேணியில் சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர்கள் பலருடன் தாமரைக்கேணியில் கடந்த வியாழக்கிழமை (22) மாலை நீராடிக்கொண்டிருக்கும்போதே சிறுமி நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு மரணமடைந்த சிறுமி ஏறாவூர் தக்வா பள்ளி வீதியைச் சேர்ந்த மர்சூக் பாத்திமா றினா என்பவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சிறுமியின் உடலை திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் சென்று பார்வையிட்டு, சடலத்தை பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபை புதிய தவிசாளராக சற்குணராசா தெரிவு





(மட்டக்களப்பு நிருபர்)

மண்முனை, தென்எருவில்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளராக எஸ்.சற்குணராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிரதேச சபையின் தவசாளராக பதவி வகித்துவந்த ஞா.யோகநாதன் அண்மையில் சுகயீனமுற்றிருந்த நிலையில் உயிரிழந்திருந்தார். அவர் பதவி வகித்த தவிசாளர் பதவி வெற்றிடமாகியதால் புதிய தவிசாளரைத் தெரிவுசெய்யும் ஒன்றுகூடல் களுதாவளையில் அமைந்துள்ள பிரதேச சபையில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது முதலில் சபை உறுப்பினர்களிடையே திறந்த வாக்களிப்பின் மூலம் தவிசாளரைத் தெரிவுசெய்வதா அல்லது இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்வதா என உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டதற்கு 11 உறுப்பினர்கள் திறந்த வாக்களிப்பின் மூலமும், 10 உறுப்பினர்கள் இரகசிய வாக்களிப்பின் மூலமும் தெரிவித்திருந்தனர். பின்னர் திறந்த முறையில் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

தவிசாளருக்காக இருவரின் பெயரை உறுப்பினர்கள் முன்மொழிந்தனர். அவ்விருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் என்பதோடு, இருவரும் களுவாஞ்சிக்குடி வட்டாரத்தின் இரட்டைத் தொகுதியில் அடங்குபவர்களாகும். ஒருவர் மே.விநோராஜ், மற்றவர் எஸ்.சற்குணராசா ஆகிய இருவருமாவர்.

21 பேர் கொண்ட சபை உறுப்பினர்களில் 10 உறுப்பினர்கள் எஸ்.சற்குணராசாவையும், 8 உறுப்பினர்கள் மே.விநோராஜையும் திறந்த முறையில் தெரிவுசெய்தனர். 3 பேர், இருவரில் எவரையும் தெரிவுசெய்யாமல் நடுநிலைமை வகித்தனர். பின்னர் எஸ்.சற்குணராசா மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் அறிவித்தார்.

புதிய தவிசாளருக்கு சபையின் ஏனைய உறுப்பினர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், முன்பிருந்த சபைத் தவிசாளருக்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கியதுபோல் தனக்கும் அனைவரும் மிகுந்த ஒத்துழைப்புகளை வழங்க வேண்டுமென இதன்போது சபையின புதிய தவிசாளர் தனது கன்னி உரையில் தெரிவித்தார்.

புதிய தவிசாளர் தெரிவுசெய்யும் கூட்ட நிகழ்வுகளைப் பார்வையிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலளார் பூ.பிரசாந்தன், மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஸ் உள்ளிட்ட பலர் இதன்போது வருகை தந்திருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**பயங்கரவாதத் தடைச் சட்டத்தை 2023, ஜனவரி 31ஆம் திகதிக்கிடையில் இரத்துச்செய்வதாக நீதியமைச்சர் விஜயதாச சொல்லியிருக்காரு எலுவா?**

**சொன்னமாதிரி செய்தா சோக்காத்தான் இருக்கும். ஆனா பயங்கரவாதத் தடைச்சட்டத்திர பெயரை மட்டும் மாத்தி தேசிய பாதுகாப்புச் சட்டம் எண்டு பதிவுவைக்காம முழுசா அத ரத்துப்பண்ணுணாத்தான் நிம்மதி பொறக்கும் இல்ல சீரழிவுதான் நடக்கும். என்ன நான் சொல்லுறது சரிதானே எலுவா?**

# மோட்டார்சைக்கிளை திருடி தீ வைப்பு

## சேருநுவர லிங்கபுரம் பகுதியில் சம்பவம்



(மூதூர் நிருபர்)

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள லிங்கபுரம் பகுதியிலுள்ள வீதியில் மோட்டார்சைக்கிள் தீயிட்டு கொளுத்தப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் (14) பதிவாகியுள்ளது.

சேருநுவர, சோமபுர பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் மோட்டார்சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு வயலுக்குச் சென்றுள்ளார். தனது வேலையை முடித்துவிட்டு மோட்டார்சைக்கிளை வந்து பார்த்தபோது மோட்டார்சைக்கிள் அவ்விடத்தில் இல்லாது அது திருடப்பட்டுள்ளதை அறிந்துள்ளார்.

குறித்த மோட்டார்சைக்கிளை சோமபுர பிரதேசத்தில் வைத்து திருடிச் சென்றவர்கள், திருடிய மோட்டார்சைக்கிளின் முக்கிய உதிரிப் பாகங்களை திருடிவிட்டு மோட்டார்சைக்கிளை லிங்கபுரம் பகுதியிலுள்ள வீதியில் வைத்து தீயிட்டு கொளுத்திவிட்டு தலைமறைவாகியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பாடசாலை வளாகத்தில் மயங்கி விழுந்த மாணவன் திடீர் மரணம்

## மகிழூர் பிரதேசத்தில் சம்பவம்

(மண்டூர் நிருபர்)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயான வீதி, கண்ணபுரம் மகிழூர் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன் பாடசாலை வகுப்பறையில் திடீரென மயங்கி விழுந்ததில் மரணமான சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


மயான வீதி, கண்ணபுரம் மகிழூர் பிரதேசத்தைச் சேர்ந்த (13 வயது) தரம்-08இல் கல்வி கற்றுவரும் மாணவனான கிருபாகரன் சதுர்சன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வழமைபோன்று பாடசாலைக்குச் சென்ற மாணவ, மாணவர்களுடன் இணைந்துகொண்டு குண்டு எறியும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். பின்னர் வகுப்பறைக்குச் சென்று மாணவர்களுடன் கலந்துரையாடிக்கொண்டிருக்கும்போது திடீரென மயக்கமடைந்துள்ளார்.

இந்நிலையில், சம்பவத்தை அவதானித்த மாணவர்கள், ஆசிரியர்களிடம் தெரிவித்ததை யடுத்து களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு மாணவர்கள், உறவினர்கள், ஆசிரியர்களின் உதவியுடன் கொண்டுசென்று சேர்த்தபோது அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ரஞ்சித்குமார் உத்தரவுக்கமைவாக மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிட்டங்கி ஆற்றில் முதலை இழுத்துச் சென்ற இளைஞன் சடலமாக மீட்பு



(பாறுக் ஷிஹான்)

மாடுகளை மேய்ப்பதற்காக கிட்டங்கி ஆற்றில் இறங்கிய இளைஞனை முதலை இழுத்துச் சென்ற நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காணாமல்போன இளைஞனை மீட்பதற்கு நேற்று முன்தினம் (24) பொதுமக்களுடன் கடற்படையினர், பொலிஸார் இணைந்து தேடுதலை மேற்கொண்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (23) மாலை மாடுகளை மேய்ப்பதற்காக கிட்டங்கி ஆற்றில் இறங்கிய இளைஞனை முதலை இழுத்துச் சென்ற நிலையில் காணாமல்போயிருந்தார்.

இச்சம்பவமானது அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி கல்முனை பகுதியை இணைக்கின்ற கிட்டங்கி வாவி பகுதியில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது மாடுகள் கிட்டங்கி வாவியில் இறங்கி நிற்பதாக நண்பன் தெரிவித்ததற்கமைய, குறித்த இளைஞன் மாடுகளை கரையேற்றுவதற்காக வாவியினுள் இறங்கிய நிலையில் முதலை இழுத்துச் சென்றுள்ளது.

இவ்வாறு முதலை பிடியினால் காணாமல் போனவர் சேனைக்குடியிருப்பு 1 பிரிவு, 157 விக்னேஸ்வரன் வீதியைச் சேர்ந்த சுகிர் பிரதாஸ் (வயது-30) என்பவராவார்.

மேற்படி பகுதியில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதுடன், முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக உரிய இடங்களில் அறிவுறுத்துதல்கள், எச்சரிக்கை பலகைகள் உரிய இடங்களில் இதுவரையும் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. முதலை அபாயம் தெரியாமல் இப்பகுதியில் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

# கிழக்கு கலால் திணைக்கள உதவி ஆணையாளராக தங்கராஜா நியமனம்



(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாண மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளராக ரோட்டரியன் சண்முகம் தங்கராஜா நியமிக்கப் பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணம் மற்றும் ஊவா மாகாணத்திற்கு 01.01.2023 தொடக்கம் புதிய உதவி ஆணையாளர்களாக முறையே ரோட்டறியன் சண்முகம் தங்கராஜா மற்றும் ரோட்டறியன் செல்வராஜா ரஞ்சன் ஆகியோர் பதவியுயர்வு பெற்று கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளர்.

இதன்படி மட்டக்களப்பு மாவட்ட கலால் அத்தியட்சகராகக் கடமையாற்றிய ஊவா மாகாண புதிய கலால் உதவி ஆணையாளராகவும், அம்பாறை மாவட்ட கலால் அத்தியட்சகராகக் கடமையாற்றிய சண்முகம் தங்கராஜா கிழக்கு மாகாண புதிய கலால் உதவி ஆணையாளராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாண கலால் உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த கனகசபை தர்மசீலன் பிரதி மதுவரி ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# லங்கா ப்ரீமியர் லீக் - 2022

# மூன்றாவது சம்பியன் பட்டமும் ஜப்னா கிங்ஸ் வசம்

ஏ. அகீல் சிஹாப்

கிரிக்கெட் உலகில் நடைபெறும் பிரபலமான இருபதுக்கு 20 லீக் தொடர்களின் ஒன்றான இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் லங்கா ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடர் கடந்த 2020ஆம் ஆண்டு ஆரம்பமானது. 5 அணிகள் பங்கேற்கும் குறித்த தொடர் கடந்த 2020ஆம் ஆண்டு இலங்கையில் கொரோனா வைரஸ் உச்சம் தொட்டிருந்த காலத்தில் கொரோனா பாதுகாப்பு வளையத்தினுள் ஆரம்பமானது.

### இதுவரையிலான சம்பியன்கள்

கடந்த 2020ஆம் ஆண்டு ஆரம்பமான குறித்த தொடரின் முதல் பருவகாலத்திற்கான சம்பியனாக திஸர பெரோரா தலைமையிலான ஜப்னா ஸ்டாலியன்ஸ் (இப்போது ஜப்னா கிங்ஸ்) மகுடம் கூடியது. இறுதிப் போட்டியில் கோல் க்ளாடியேட்டர்ஸ் அணியை வீழ்த்தி ஜப்னா சம்பியனானது. 2021ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது தொடரிலும் திஸர பெரேரா தலைமையிலான ஜப்னா கிங்ஸ் அணி சம்பியனானது.

### 2022 எல்.பி.எல்.

மூன்றாவது எல்.பி.எல். தொடரானது கடந்த 6ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் ஆரம்பமானது. ஹம்பாந்தோட்டை, பல்லேகல மற்றும் கொழும்பு ஆகிய மூன்று இடங்களில் போட்டிகள் நடைபெற்றன.

### லீக் சுற்றில் ஆதிக்கம் செலுத்திய கண்டி பல்கொன்ஸ்

நடப்பு சம்பியன் என்ற பெருமையுடன் களமிறங்கிய ஜப்னா கிங்ஸ் அணியை விட வனிந்து ஹசரங்க தலைமையிலான கண்டி பல்கொன்ஸ் அணி சிறப்பாக ஆடி லீக் சுற்று முடிவில் 8 ஆட்டங்களில் 7 வெற்றிகளை குவித்து 14 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை கைப்பற்றியது. ஜப்னா கிங்ஸ் அணி 6 வெற்றிகளுடன் இரண்டாமிடத்தை கைப்பற்ற கண்டி மற்றும் ஜப்னா அணிகள் முதலாவது தகுதிகாண் போட்டிக்குத் தெரிவாகின.

### இரு போட்டிகளையும் கோட்டைவிட்ட கண்டி பல்கொன்ஸ்

லீக் சுற்றில் முதலிடம் பிடித்த கண்டி பல்கொன்ஸ் அணிக்கு இறுதிப்போட்டிக்கு தகுதிபெற இரு வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால், அந்த அணி இரு போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது. ஜப்னா கிங்ஸ் அணியுடன் முதல் தகுதிகாண் ஆட்டத்தில் தோல்வியடைந்த நிலையில், இரண்டாவது தகுதிகாண் ஆட்டத்திலும் கொழும்பு ஸ்டார்ஸ் அணியுடன் தோல்வியடைந்து இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்தது.

### முதல் இறுதிப்போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ்

மூன்றாவது எல்.பி.எல். தொடரில் முதல் முறையாக அஞ்சலோ மெத்யூஸ் தலைமையிலான கொழும்பு ஸ்டார்ஸ் அணி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது. மறுமுனையில் திஸர பெரேரா தலைமையிலான ஜப்னா கிங்ஸ் அணி வரிசையாக மூன்றாவது இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

### ஹெட்ரிக் சம்பியனாக வரலாறு படைத்த ஜப்னா கிங்ஸ்

2022ஆம் ஆண்டுக்கான எல்.பி.எல். தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் இறுதியாட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் முதல் சம்பியன் பட்டத்தை இலக்குவைத்து அஞ்சலோ மெத்யூஸ் தலைமையிலான கொழும்பு ஸ்டார்ஸ் அணியும் - ஹெட்ரிக் சம்பியன் பட்டத்தை இலக்குவைத்து ஜப்னா கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜப்னா கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு சிறந்த ஆரம்பம் அமையாத போதும், தினேஷ் சந்திமால் 40 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுக்க, ரவி பொப்பரா இறுதிவரை ஆட்டமிழக்காது 33 பந்துகளில் 47 ஓட்டங்கள் குவிக்க இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களை கொழும்பு ஸ்டார்ஸ் அணி பெற்றது.

164 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜப்னா கிங்ஸ் அணி சிறந்த ஆரம்பத்தைப் பெற்றது. ரஹ்மானுல்லா குர்பாஸ் 36 ஓட்டங்களைப் பெற்றார். மறுமனையில் சதீர சமரவிக்ரம 27 பந்துகளில் 44 ஓட்டங்களை எடுக்க, அவிஷ்க பெர்னாண்டோவின் அரைச்சதம் மூலம் 19.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை பெற்று ஜப்னா கிங்ஸ் அணி மூன்றாவது முறையாகவும் சம்பியனானது.



வளர்ந்துவரும் வீரருக்கான விருதை வென்ற யாழ். மண்ணின் வியாஸ்காந்த்

## 2022 எல்.பி.எல். தொடரின் விருதுகள்

### இறுதிப்போட்டியின் ஆட்டநாயகன்

துடுப்பாட்டத்தில் 50 ஓட்டங்களைக் குவித்து ஜப்னா கிங்ஸ் அணி மூன்றாவது முறையாகவும் சம்பியன் பட்டம் வெல்ல உதவிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோ இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவானார்.

### தொடர் ஆட்டநாயகன்

ஜப்னா கிங்ஸ் அணியின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான சதீர சமரவிக்ரம இறுதிப் போட்டியில் பெற்ற 44 ஓட்டங்களின் உதவியுடன் 9 இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 294 ஓட்டங்களைக் குவித்த நிலையில் தொடர் ஆட்டநாயகனாக தெரிவானார்.

### தொடரின் வளர்ந்துவரும் வீரர்

2022 எல்.பி.எல். தொடரில் வளர்ந்துவரும் வீரருக்கான விருதை ஜப்னா கிங்ஸ் அணிக்காக ஆடிய யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுழற்பந்துவீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்த் தட்டிச்சென்றார். தொடரின் 8 ஆட்டங்களில் 13 விக்கெட்டுகளை வீழ்த்திய 21 வயதான வியாஸ்காந்த் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்களில் வரிசையில் நான்காமிடத்தைப் பிடித்தார்.

### அதிக சிக்ஸர் - தொடரின் புதுமையான வீரர்


இந்த விருதை ஜப்னா கிங்ஸ் அணிக்காக ஆடிய ஆப்கானிஸ்தானை சேர்ந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரஹ்மானுல்லாஹ் குர்பாஸ் தட்டிச்சென்றார். அத்துடன் தொடரில் அதிக சிக்ஸர்களை விளாசிய வீரராகவும் 15 சிக்ஸர்களை விளாசிய குர்பாஸ் தெரிவானார்.

### அதிக ஓட்டங்களுக்கான விருது

தொடரில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரருக்கான விருதை 10 இன்னிங்ஸ்களில் 339 ஓட்டங்களைக் குவித்த ஜப்னா கிங்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோ பெற்றுக்கொண்டார்.

### அதிக விக்கெட்களுக்காக விருது

தொடரில் அதிக விக்கெட்களை வீழ்த்திய வீரருக்கான விருதை 8 இன்னிங்ஸ்களில் 18 விக்கெட்களை வீழ்த்திய கண்டி பல்கொன்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் கார்லஸ் பிரத்வெயிட் பெற்றுக்கொண்டார்.

















# கட்டுப்பாடுகள் தளர்வால் அடங்க மறுக்கும் கொரோனா

## சீனாவில் 25 கோடி பேர் பாதிப்பு; அமெரிக்காவில் XBB தொற்று அதிகரிப்பு

சீனாவில் இம்மாதத்தில் மட்டும் சுமார் 25 கோடி பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையிலும், கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டங்கள் களைகட்டின.

ஷாங்காய் நகர சந்தையில் முகக்கவசம் அணிந்து பண்டிகைக்கு தேவையான பரிசுப் பொருட்களை வாங்க கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

சீனாவில் மீண்டும் கொரோனா பரவல் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியுள்ளதால், இந்த வார இறுதியில் மக்கள் வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

இந்நிலையில், கொரோனா பாதிப்பிலிருந்து சீனா விடுபட பல மாதங்களாகும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கட்டுப்பாடுகளுக்கு எதிரான போராட்டங்களுக்குப் பணிந்து பூஜ்ஜியம் கொவிட் கொள்கையை சீன அரசு தளர்த்தியதையடுத்து இருபதே நாட்களில் 3 ஆண்டுகளாக கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த கொவிட் சுனாமி பேரலையாக சீனாவை சூழ்ந்துள்ளது.

தற்போது உருமாறிய பி.எப்.7 வகை கொரோனா பாதிப்பால் சீனாவிலுள்ள மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. அத்தோடு, மயானங்களிலும் மருத்துவமனை பிரேத அறைகளிலும் சடலங்கள் நிரம்பி வழிகின்றன.

### அமெரிக்காவில் XBB தொற்று அதிகரிப்பு

அமெரிக்காவில் ஒமிக்ரொன வைரஸின் துணை வகையான XBB தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 18 சதவீதமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் இது 7 சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின்வடகிழக்குப்பகுதியில்தொற்றுபாதிப்புஅதிகரித்திருப்பதாகவும், இலட்சக்கணக்கான மக்கள் கிறிஸ்மஸ் விடுமுறை பயணத்தை தொடங்கியிருப்பதால் தொற்று வேகமாக பரவும் அபாயம் எழுந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

### பலி - பலி -பாதிப்பை மூடி மறைக்கும் சீனா

இந்நிலையில் கொரோனா உயிரிழப்பு - பாதிப்பு குறித்து அதிகாரிகள் தரும் உண்மையான கணக்குகளை தணிக்கை செய்து தவறான புள்ளிவிவரங்களை சீன அரசு வெளியிடுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

சீனாவில் உருமாறிய ஒமிக்ரொன் பி.எப்.7 வைரஸ் காட்டுத்தீயாக பரவி வருகிறது. திடீரென தனது பூஜ்ஜிய கொரோனா கட்டுப்பாடுக் கொள்கையை சீன அரசு தளர்த்தியதன் விளைவால் நிலைமை கைமீறிப் போயுள்ளது. உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு ஒரே நாளில் 3 கோடிக்கும் அதிகமான மக்கள் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



தலைநகர் பீஜிங் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் அனைத்து மருத்துவமனைகளும் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. பலர் கொரோனாவால் உயிரிழந்து மயானங்களில் அடுத்தடுத்து சடலங்கள் கொண்டு வரப்படுகின்றன. மேலும், பல வைத்தியசாலைகளில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் துணியால் சுற்றப்பட்டு ஓரமாக வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் வீடியோக்களும் பல சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன. எனினும், கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்த சீனாவில் எந்த உண்மை நிலைவரத்தையும் அந்நாட்டு அரசு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

இப்போதும் தினசரி பாதிப்பு 3,000 மட்டுமே என கூறி வருகிறது. புதிய கொரோனா அலையால் எவரும் உயிரிழக்கவில்லை என்றும் கூறி வருகிறது. இதற்கிடையே, குயிங்டோ மாகாணத்தில் ஒரு நாளுக்கு 4.9 இலட்சம் முதல் 5.3 இலட்சம் பேர் வரை தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால், சீன அரசின் தேசிய சுகாதார ஆணையம் வெளியிட்டுள்ள 24 மணிநேர பாதிப்பில் நாடு முழுவதும் வெறும் 4,103 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

60 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொரோனாவால் பாதிக்கப்படுவார்கள் என்றும் நிபுணர்கள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடலில் தத்தளிக்கும் அகதிகள்

## மீட்கக் கோருகிறது ஐ.நா.

பங்களாதேஷ் முகாம்களிலிருந்து படகில் தப்பிய ரோஹிங்யா அகதிகள் 160 பேர் ஒரு மாதத்துக்கும் மேலாக கடலில் தவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக படகு மூலம் மலேஷியாவுக்குச் செல்ல முயன்ற அவர்களை மீட்க வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையம் போன்றவை இந்தியா, மலேஷியா, தாய்லாந்து அரசுகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளன.

பங்களாதேஷ் அகதிகள் முகாம்களில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற அவர்கள் கடலில் வழிதவறி தத்தளித்து வருகின்றனர். வாரக்கணக்கில் கடலில் இருப்பதால் உணவும் குடிநீரும் கிடைக்காமல் குழந்தைகளுடன் பலர் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

படகிலிருந்த 20இற்கும் மேற்பட்டோர் இந்தப் பயணத்தின்போது உயிரிழந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7